எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 27 டிசம்பர் 2024 இதழ்:- 30

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! தாயகத்தில் மாரி மழையுடன் சேர்ந்து பாரிய அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளை உணவுப் பொருட்கள் மற்றும் உடை, போர்வை போன்ற அத்தியாவசிய தேவை அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்கும் உடனடித் தேவையாகவுள்ளது. குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில் களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்கு வதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

# சுதந்திர இலங்கையில் அனைவருக்குமான அரசியல் யாப்பு இன்னமும் உருவாக்கப்படவில்லை



சுதந்திர இலங்கையில் அனைத்து இனக்குழுமங்களும் ஏற்றுக் கொள்கின்ற அரசியல் யாப்பொன்று இன்னமும் உருவாக்கப்படவில்லை என்று சட்டத்தரணி லால் விஜயநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் புதிய அரசியல்யாப்பொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியுள்ள அவர் அதில் அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகள் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார். (8ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## திரும்பத் திரும்பக் கேட்கும் வாக்குறுதி

# 13வது திருத்தம் தொடர்பில் இந்தியப் பிரதமரின் மௌனத்திற்கு இலங்கை - தமிழ்நாடு கட்சிகளின் அழுத்தம் இன்மையே காரணம் - வரதராஜப்பெருமாள்



இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் கடந்தவாரம் புதுடில்லியில் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கையின் அரசியலமைப்புக்கான 13வது திருத்தம் தொடர்பில் மௌனம் சாதித்தமை இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளிடமிருந்தும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளிடமிருந்தும் நெருக்குதல்கள் இல்லாததன் விளைவு என்று இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப் பெருமாள் கூறியிருக்கிறார். (5ம் பக்கம் பார்க்க)



## அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



21 Years Real Estate Experience

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY**

## Simcoe St N. & Conlin Rd


**Oshawa** **$279,000**
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


## Sheppard Ave & Allen Rd


**Toronto** **$619,000**
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University

## Neilson/Tapscott

**Scarborough** **$445,000**
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

## Kennedy Rd / Hwy 401

**Scarborough** **$699,000**
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!

## Sheppard & Neilson

**Malvern** **$699,900**
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!


## Simcoe St N/ Brittania Ave

**Oshawa** **$770,000**
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse

## McLevin Ave & Morningside

**Malvern** **$880,000**
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement


## Townline Rd & Shankel Rd

**Oshawa** **$999,900**
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

## Sheppard Ave E / Neilson Rd

**Scarborough** **$842,000**
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED

## Church St N & Rossland Rd W

**Ajax** **$899,999**
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

## Church St N & Rossland Rd W

**Ajax** **$899,999**
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors

## Kellough St/ Mcneil St


**Innisfil** **$1,295,000**
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen

## Ninth Line/Donald Cousens

**Markham** **$630,000**
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital

## Mara & King

**Beaverton** **$729,800**
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home

## Finch Ave E/ Morningside Ave
FOR LEASE

**Scarborough** **$2,500**
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned

## Scarborough Golf/Lawrence Ave
FOR LEASE

**Scarborough** **$1,900**
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இராணுவத்தினரின் காணிகளை விடுவிக்க வடக்கு மக்கள் கோரவில்லை - வடக்கு ஆளுநர்



இராணுவத்தினரின் காணிகளை வடக்கு மக்கள் விடுவிக்கக் கோர வில்லை. அவர்களின் சொந்தக் காணி களையே விடுவிக்கக் கோருகின்றார் கள் என்ற தெளிவுபடுத்தலை தென்னி லங்கை மக்களுக்கு எடுத்துச் சொல்லுமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்துள் ளேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வயாவிளான், பலாலி தெற்கு பலாலி கிழக்கு மக்களின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமை யில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடலும், பூனையன்காடு இந்து மயானத்தில் மர நடுகையும் நேற்று வயாவியானில் நடைபெற் றது. இந்நிகழ்வில் உரையாற்றிய போதே ஆளுநர் மேற்கொண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு காலத்தில் யாழ். மாவட்டச் செயலராக நான் இருந்த போது படிப்படியாக பல பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் குடியமர வில்லை என பாதுகாப்புத் தரப்பினர் எங்களுக்கு திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் வீட்டுத் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தினோம். மக்களும் எதிர்பார்த்ததைப் போன்று மீள்குடிய மர்ந்தார்கள்.

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தை தொடர்ந்து காணி விடுவிப்புக்கள் நடைபெறவில்லை. இந்த ஆண்டு சிறிய அளவில் காணிகள் விடுவிக்கப் பட்டிருக்கின்றன. விடுவிக்கப்பட்ட காணிகளை விவசாய பூமியாக மாற்றுவது தான் நீங்கள் எங்களுக்கு செய்யும் உதவி.

இடம் பெயர்ந்தவர்களின் வலி எனக் கும் தெரியும். நானும் இடம்பெயர்ந்த ஒருவன் தான். தற்போது யாழ். மாவட்ட இராணுவத்த தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள யஹம்பத் நேர் சிந்தனை உடைய ஒருவர். எனவே இந்த அரசாங்கத்தின் காலத்தில் படிப்படியாக காணிகளை விடுவிக்க முடியும் என நம்புகின்றோம்.

இங்கு காணிகள், வீதிகள் விடுவிக்கப் பட்டதும் தென்னிலங்கையிலிருந்து சில தேவையற்ற கருத்துக்கள் வெளி யிடப்பட்டு அழுத்தங்கள் பிரயோகிக் கப்படுகின்றன. தென்னிலங்கை மக்களுக்கு இங்கு நடைபெறுவது என்ன என்ற உண்மையை தெளிவு படுத்துமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையை சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்திருக் கின்றேன்.

வடக்கு மக்கள் எல்லோருக்கும் எதிர்பார்ப்பு இருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். விரைவில் சாதக மான விடயங்கள் நடக்கும் என நம்பு கின்றேன் என்று ஆளுநர் தெரிவித் தார்.

இதன் பின்னர் அந்தப் பிரதேசத்தில் வடக்கு ஆளுநரால் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. இந்த நிகழ் வில் தெல்லிப்பழை பிரதேச செயலர், வலி. வடக்கு பிரதேச சபை செயலர், தெல்லிப்பழை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஆகியோர் பங்கே ற்றனர்.

# மஹிந்தாவுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதல் அச்சுறுத்தல் பொய்யானது அவரது பிள்ளைகள் அவரைப் பராமரித்துக் கொள்ளட்டும்!

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் மக்கள் மத்தியில் அச்சமில்லாமல் செல்கிறார் கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் தாக் குதல் அச்சுறுத்தல் இருப்பதாக குறிப்பிடுவது முற்றிலும் பொய்யா னது. முன்னாள் ஜனாதிபதிகளை பராமரிப்பதற்கு கோடி கணக்கில் அரசு செலவு செய்ய வேண்டிய தேவையில்லை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை கடந்த 24 டிசம்பர் 2024 நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாது காப்பு மற்றும் வழங்கப்படுகின்றன சிறப்பு சலுகைகளை குறைப்போம் என்று நாட்டு மக்களுக்கு வாக் குறுதியளித்தோம். நாட்டு மக்களும் இதனை முழுமையாக ஏற்றுக் கொண்டார்கள். துறைசார் நிபுணத் துவ குழுவின் அறிக்கைக்கு அமை யவே முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவ பாது காப்பு மீளப் பெறப்பட்டு போதுமான அளவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரு க்கும் வழங்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டு ள்ளது. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ



வின் பாதுகாப்பு குறித்து மாத்திரம் தான் அதிகளவில் பேசப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தாக்குதல் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும். ட்ரோனர் கருவி ஊடான தாக்குதல் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படு கிறது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குல் சம்பவங்களை நடத்தியவர் களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தாக்குதல் பற்றி பேசுவது ஒன்றும் ஆச்சிரியத்துக்குரியதல்ல.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு உயிரச்சு றுத்தல் இருப்பதாக குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட இராணு வத்தினர் அவர்களின் தென்னந்தோப்பு க்களை பராமரிப்பதற்கும், வீட்டு நாய்களை பராமரிப்பதற்கும் பயன் படுத்தப்பட்டதை மக்கள் அறிவார் கள்.

மஹிந்தவின் உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக குறிப்பிட்டுக் கொண்டு அவரை சார்ந்துள்ளவர்கள் அனுதாப அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள். நாட்டு மக்கள் இந்த பொய்யை ஏற்றுக் கொள்ள போவ தில்லை. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பிள்ளைகள் உள்ளார்கள். அவர்கள் அவர்களை பராமரித்துக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கடந்த காலங்களை போன்று பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் செல்ல வில்லை. மக்களோடு மக்களாகவே செயற்படுகிறார்கள். மஹிந்த ராஜபக்ஷ தேசிய பாதுகாப்பையும், இன நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தி யிருந்தால் ஓய்வுப் பெற்றதன் பின்ன ரும் இராணுவ பாதுகாப்பில் இரு க்க வேண்டிய தேவை கிடையாது. பொருளாதார பாதிப்பினால் ஒட்டு மொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஓய்வுப் பெற்ற முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பல கோடி ரூபாவை பாதுகாப்புக்காக செலவு செய்வது எந்தளவுக்கு நியாயமானது என்றார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# இலங்கை அரசு வாக்குறுதிகளை சாத்தியமாக்குவது சவால்மிக்கது! முன்னாள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் யஷ்வர்தன் குமார் தெரிவிப்பு!

பொருளாதார மீட்சி மற்றும் கட்டமைப்பு ரீதியிலான மாற்றம் என்பன சார்ந்து வழங்கியிருக்கும் வாக்குறுதிகளை சாத்தியமாக்குவது இலங்கை அரசாங்கத்துக்கு சவால் மிக்கது என இலங்கைக்கான முன் னாள் இந்திய உயர்ஸ்த்தானிகர் யஷ்வர்தன் குமார் சின்ஹா தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வின் அண்மைய இந்திய அரசமுறை விஜயம் தொடர்பில் இந்திய ஊடக மொன்றுக்கு வழங்கியிருக்கும் நேர் காணலில் அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய விஜயம் குறிப்பிடத்தக்கதொரு முக்கியத்து வம் வாய்ந்ததாகும். ஏனெனில் இலங்கையில் ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்கள் அண்மையிலேயே நடைப்பெற்று முடிந்திருக்கின்றன. அத்தோடு தற்போது ஆட்சிபீடம் ஏறியிருக்கும் தேசிய மக்கள் சக்தியின் பின்னணியில் இருக்கும் மக்கள் விடுதலை முன்னணி 1971 ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் ஈடு பட்ட வரலாற்றைக் கொண்டிருக் கிறது.

அத்தோடு 1987மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் குறிப்பாக இந்திய அமைதி காக்கும் படை மற்றும் இந்திய இலங்கை ஒப்பந்தம் என்பவ ற்றுக்கு எதிராகவும் கிளர்ச்சியில் ஈடுபட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியா மிக முக்கிய அயலக நாடு



என்பதை புரிந்துக் கொண்டிருப்ப தும், அவரது பதவிக் காலத்தின் தொடக்கத்திலேயே இந்தியாவுக்கு விஜயம் செய்ய தீர்மானித்தமையும் மிக முக்கியமானதாகும்.

இவ்விஜயத்தை அடுத்து வெளியிடப் பட்ட இலங்கை - இந்திய கூட்ட றிக்கை மிக முக்கியமானது. ஏனெ னில் அது கடந்த அரசாங்கங்களி னால் முன்னெடுக்கப்பட்ட செயற் திட்டங்கள் மற்றும் பேச்சுவார்த்தை கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

இருப்பினும் என்னை பொறுத்த மட்டில் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான கூட்டு செயற்திட்டத்தை தயாரிப்பது குறித்து அவ்வறிக்கை யில் உள்ளடக்கப்பட்டிருந்த விட யமே, அதி முக்கியத்துவம் வாய்ந்த தாக தென்பட்டது. ஏனெனில் நானறிந்தவரை 1987 ஆம் ஆண்டின் பின்னர் இவ்விடயம் குறித்து இந்தளவுக்கு தெளிவாக இலங்கை - இந்திய கூட்டறிக்கைகளில் குறிப் பிடப்படவில்லை. அடுத்ததாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நாம் எட்கா ஒப்பந்த மாக விரிவுப்படுத்த முற்பட்ட போதி லும் அது சாத்தியமாகவில்லை. ஏனெனில் தலைமைத்துவங்கள் பொருளாதார ரீதியில் சிந்தித்ததை விட அரசியல் ரீதியிலேயே சிந்தித்த தாக நான் கருதுகிறேன்.

அவ்வொப்பந்தத்தின் ஊடாக எமது உற்பத்திகளுக்கு இடமிருக்காது எனவும், இந்திய வைத்தியர்கள் உள்ளிட்ட தொழிற்றுறையினரின் ஆக்கிரமிப்பு இருக்குமெனவும் ஒரு அச்சம் தோற்றுவிக்கப்பட்டது.

இருப்பினும் இந்தியா அதன் அடைவுகளை அயலக நாடுகளுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறது. அதில் இலங்கைக்கு எப்போதும் தனியிடம் உண்டு. அதேவேளை ஜனாதிபதியின் உரைகளில் பல்வேறு முக்கிய விடயங்கள் இடம்பிடித்தி ருந்தன. குறிப்பாக இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிராக இலங்கையில் எந்தவொரு நடவடிக்கைகளும் இடம்பெறுவதற்கு தாம் அனுமதிக்க போவதில்லை என ஜனாதிபதி ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் கூறியிருந்தார். இது மிக முக்கிய மானதாகும்.

இது எவ்வாறு இருப்பினும் பொரு ளாதார மீட்சி மற்றும் கட்டமைப்பு ரீதியிலான மாற்றம் என்பன சார்ந்து வழங்கியிருக்கும் வாக்குறுதிகளை சாத்தியமாக்குவது இலங்கை அரசாங்கத்துக்கு சவால்மிக்கதொரு விடயமாகவே இருக்கும்.

ஆனாலும் அவர்களால் அதனைச் செய்ய முடியும் என நம்புகிறேன். ஏனெனில் இலங்கை மக்கள் இயல்பாகவே மீண்டெழக் கூடிய தன்மையினை கொண்டிருக்கிறார் கள். அத்தோடு அவர்களுக்கு உதவு வதற்கு இந்தியா போன்ற சிறந்த அயலக நாடு இருக்கிறது என்றார்.


எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை சங்கீத சங்கமம் 2025



கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக் களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# 13வது திருத்தம் தொடர்பில் இந்தியப் பிரதமரின் மௌனத்திற்கு இலங்கை - தமிழ்நாடு கட்சிகளின் அழுத்தம் இன்மையே காரணம் - வரதராஜப்பெருமாள்

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் கடந்தவாரம் புதுடில்லியில் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கையின் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் தொடர்பில் மௌனம் சாதித்தமை இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளிடமிருந்தும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளிடமிருந்தும் நெருக்குதல்கள் இல்லாததன் விளைவு என்று ை இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப் பெருமாள் கூறியிருக்கிறார்.



1987ஆம் ஆண்டில் 13வது திருத்தம் நடைமுறைக்கு வந்த நாளில் இருந்து இந்திய தலைவர்கள் இலங்கையின் தலைவர்களுடனான தங்களது பேச்சுவார்த்தைகளில் அந்த திருத்தம் பற்றி குறிப்பிடுவது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் ஒரு அளவில் சுயாட்சியை விதந்துரைத்த 1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் ஒரு விளைவே 13 வது அரசியலமைப்பு திருத்தமாகும்.

2015 மார்ச் மாதம் இலங்கைக்கு மேற்கொண்ட முதல் விஜயத்தின் போது 13வது திருத்தம் விரைவாக முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

2023 யூலையில் அன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைகளை நடத்த புதுடில்லிக்கு சென்ற போது அந்த திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதில் இருக்கும் கடப்பாட்டை இலங்கை நிறைவு செய்யும் என்று நம்புவதாக மோடி குறிப்பிட்டார்.

1988 டிசம்பர் தொடக்கம் 1990 மார்ச் வரை இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த 71 வயதான வரதராஜப்பெருமாள் திங்களன்று (23) தி இந்து' வுக்கு தொலைபேசி மூலமாக வழங்கிய நேர்காணல் ஒன்றில் இலங்கை தமிழ்க்கட்சிகள் இலங்கை தமிழரசு கட்சியாக இருந்தாலென்ன, தமிழ் காங்கிரஸாக இருந்தாலென்ன அல்லது வேறு எந்த ஜனநாயக தமிழ் அரசியல் இயக்கமாக இருந்தாலென்ன ஒற்றையாட்சித் தன்மையுடைய அரசின் கீழ் எந்தப்பயனும் ஏற்படப்போவதில்லை என்ற நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றன என்று கூறினார்.

ஆனால், நடைமுறை யதார்த்தத்தில் ஒற்றையாட்சித் தன்மையை மாற்றுவது சாத்தியமானதல்ல. 1983 கறுப்பு யூலை இனவன் செயலுக்கு பிறகு முன்னாள் இந்திய பிரதமர் இந்திரா காந்தியினால் மத்தியஸ்தராக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோபாலசுவாமி பார்த்தசாரதி இதை நேர காலத்தோடு தெளிவாக விளங்கிக் கொண்டார்.`

1987 உடன்படிக்கை உட்பட அரசியல் இணக்கத் தீர்வுக்கான சகல முன்மொழிவுகளுமே ஒற்றையாட்சி முறையின் தவிர்க்க முடியாத தன்மையை கருத்திற் கொண்டே முன் வைக்கப்பட்டன.

அன்று சகல யோசனைகளையும் நிராகரித்த தமிழீழ விடுதலை புலிகளினால் வெளிப்படுத்தப்பட்ட மானநிலையே இன்று வரை தொடருகிறது' என்று விடுதலை புலிகளுக்கு எதிரான முகாமில் இருந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவர்களில் ஒருவராக இருந்த முன்னாள் முதலமைச்சர் கூறினார்.

13வது திருத்தம் பற்றி இலங்கை தமிழ் அரசியல் கட்சிகள் பேசிய சந்தர்ப்பங்களிலும் கூட அவை அந்த திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு எந்த முயற்சியையும் மேற்கொண்டதில்லை. பதிலாக அந்த பணியைச் செய்வது இந்தியாவின், இந்திய அரசாங்கத்தின் பொறுப்பு என்றே அந்த கட்சிகள் கூறின என்று வரதராஜப் பெருமாள் குறிப்பிட்டார்.

தவிரவும், தமிழ்நாட்டில் உள்ள எந்தவொரு கட்சியுமே 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவைக்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை. அரசியல் இணக்கத் தீர்வைப் பற்றி பேசிய தமிழ் நாட்டுக் கட்சிகள் இந்திய அரசாங்கம் ஒருபோதுமே இணங்காத தமிழ் ஈழக்கோட்பாட்டையே உயர்த்திப் பிடித்தன என்று அவர் மேலும் கூறினார்.

மேலும், 1980களில் இலங்கை தமிழர் பிரச்சினையை கையாளுவதில் இந்தியாவின் தலையீட்டுக்கு வழி வகுத்தது உள்நாட்டுக் காரணியே என்பதை நினைவு படுத்திய அதேவேளை வரதராஜப் பெருமாள் உள்நாட்டில் உண்மையான நெருக்குதல் இருந்தால் மாத்திரமே இந்திய அரசாங்கம் செயலில் இறங்கும் என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான அரசியல் கட்சாயான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) ஒரு காலத்தில் மாகாணசபை முறையை கடுமையாக எதிர்த்தது என்றும் அவர் கூறினார். முன்னாள் முதலமைச்சர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அடிக்கடி பயணம் செய்து கொண்டிருக்கிறார். நாளடைவில் ஜே.வி.பி. அதன் நிலைப்பாட்டை மாற்றி விட்டது. தற்போது அந்த கட்சி மாகாண சபைகளை எதிர்ப்பதில்லை. ஆனால் அதேவேளை 13 வது திருத்தத்தை ஏற்றுக் கொள்வதில்லை. அடிப்படையான பிரச்சினைக்கு 13 வது திருத்தம் ஒரு தீர்வு அல்ல என்பதே ஜே.வி.பி.யின் பாரம்பரியமான நிலைப்பாடு.

அந்த திருத்தத்தை தமிழர்களே ஏற்பதில்லை என்றும் ஜே.வி.பி. கூறி வந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உள்ளூராட்சி சபைகளை பலப்படுத்தக் கூடும் என்று முன்னாள் முதலமைச்சர் கூறினார்.

## கிளிநொச்சி அபிவிருத்திக் கூட்டத்தில் நடந்த அநாகரீக வாக்குவாதம்

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இலங்கை பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனாவுக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

இதன்போது சகாதேவன் அர்ச்சுனாவை பார்த்து, பாராளுமன்ற உறுப்பினர் போல இல்லாமல் நீங்கள் ஏன் பைத்தியக்காரத்தனமாக பேசுகின்றீர்கள் என்று கூறினார். அதற்கு shut up (வாயை மூடுங்கள்) என்று அர்ச்சுனா கூறினார்.

இதன்போது குறிக்கிட்ட தம்பிராசா, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். Shut up என்று எல்லாம் கூற முடியாது. இங்கே அதிகாரிகள் தான் உள்ளார்கள் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கதைக்கும் போது, கதைப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கின்றது என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றீர்களா என்று விட்டு தம்பிராசாவை பார்த்து "can you shut up" (உங்களது வாயை மூட முடியுமா?) என்றார்.

அத்துடன் சகாதேவனை பார்த்து உங்களுடன் திருப்பி கதைத்ததற்காக ஒரு நாளில் 8 அல்லது 10 பேரை இடமாற்றம் செய்துள்ளீர்கள். இதனை உங்களது கட்சியோடு வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

இதன் போது குறுக்கிட்ட தம்பிராசா, ஒரு அரச அதிகாரியை பொது வெளியில் வைத்து அவமானப்படுத்த கூடாது. இடமாற்றம் பெற்றவர்கள் வேண்டும் என்றால் அமைச்சுக்கு முறையிடலாம் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா நீங்கள் எந்த கட்சி? உங்களுக்கு கிடைக்கவில்லை தானே nomination ஆகையால் அடுத்த முறை முயற்சியுங்கள். தயவு செய்து தம்பிராசாவை வெளியே அகற்றுங்கள். ஒரு பொம்பிளை பிள்ளையை பற்றி முகநூலில் எவ்வளவு எழுதுகின்றீர்கள். வெளியே போம் என்றார்.

அதற்கு பதிலளித்த தம்பிராசா நீங்கள் இரவு பகலாக ஒரு பொம்பிளையை கொண்டு திரிகிறாய் என்றார்.

அதற்கு பதிலளித்த அர்ச்சுனா நான் ஒன்றைத் தான் கொண்டு திரிகிறேன். நீங்கள் எத்தனையை கொண்டு போய் வெளிநாடுகளில் கொடுத்தீர்கள் என்று எங்களுக்கு தெரியும். எதற்காக இவரை அழைக்கின்றீர்கள். இவர் ஒரு அழையா நபர் ஆகையால் வெளியே செல்லுங்கள். அமைச்சர் அவர்களே ஒரு அழையா நபரை உள்ளே விட்டு ஏன் பிரச்சினையை உருவாக்குகின்றீர்கள். இவர் யார்? என்ன அடிப்படையில் உள்ளே வந்தார் என்றார்.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில் இனி மேல் பொது மக்களுக்கோ ஊடகங்களுக்கோ அனுமதி இல்லை. பொதுமக்கள் முறையிட வேண்டுமாக இருந்தால் நாங்கள் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் உள்ளோம். பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள். அவர்களிடம் முறையிடுங்கள் என்றார்.

# கிளிநொச்சியில் மதுபானசாலைகளை மூடுமாறு மக்கள் போராட்டம்!

கிளிநொச்சியில் அதிகரித்த மதுபான சாலைகளை மூடுமாறு கோரி 24 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமை கண்டன பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதிக்கான மனு ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான மதுபான சாலைகள் திறக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்துக் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தின் போது அதிகரித்த மதுபான சாலைகளை மூடுமாறு கோரி கிளிநொச்சி பசுமைப்பூங்கா முன்றலில் இருந்து ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை குறித்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

பேரணியைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மத தலைவர்கள் இணைந்து மாவட்ட அரச அதிபர் சு.முரளிதரனிடம் கையளித்துள்ளனர்.

இப்போது போராட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் சமூக அமைப்புகள் மதத் தலைவர்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினர் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.



# மாகாணசபைத் தேர்தல் தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்தல் எனும் விடயங்கள் இலங்கையும் இந்தியாவும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் உள்வாங்கப்படவில்லை - இலங்கை



அரசியலமைப்பு அமுலாக்கம், மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துதல் மற்றும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்தல் எனும் விடயங்கள் இலங்கையும், இந்தியாவும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் உள்வாங்கப்படவில்லை.

இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்கள் சார்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை அந்நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இருக்கிறது.

அதனடிப்படையிலேயே அவரால் அக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன எனச் சுட்டிக்காட்டிய வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத், அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் உள்ளடங்கியிருப்பதனால் அவ்விடயத்தை கூட்டறிக்கையில் உள்வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய இந்திய விஜயத்தின் போது ஆராயப்பட்ட விடயங்கள் மற்றும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்று 20 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது விசேடமாக அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் குறித்து என்ன பேசப்பட்டது என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அத்தோடு அவ்விரு தரப்பு சந்திப்பை அடுத்து இலங்கையும், இந்தியாவும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் குறித்து எந்தவொரு விடயமும் உள்வாங்கப்பட்டிருக்காத நிலையில், அவ்விடயத்தை உள்வாங்குவதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கவில்லை என வெளியான தகவல்களின் உண்மைத்தன்மை தொடர்பிலும் அமைச்சரிடம் வினவப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித்த ஹேரத், அக்கூட்டறிக்கையில் அதனை உள்வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனத் தெரிவித்தார். 'நாம் எமது நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாகவே செயற்படுவோம். எமது அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தம் உள்வாங்கப்பட்டிருக்கிறது. எனவே அது குறித்து புதிதாகக் கலந்துரையாட வேண்டிய அவசியமோ அல்லது கூட்டறிக்கையில் உள்ளடக்க வேண்டிய அவசியமோ இல்லை' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு 'எதிர்வரும் 2025ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் நடாத்தப்படும். அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து, மீண்டும் புதிதாக வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படக் கூடிய விதத்தில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது அதற்குரிய ஆயத்தங்கள் மேற் கொள்ளப்பட்டு வரும் நிலையில், எதிர்வரும் ஜனவரிமாதத் தொடக்கத்தில் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு எதிர் பார்த்திருக்கிறோம். அதனைத் தொடர்ந்து தேர்தல்கள் ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படும் தினத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் நடாத்தப்படும்' எனவும் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னர் மாகாணசபைத் தேர்தல்களை நடாத்த வேண்டியிருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இருப்பினும் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாததன் விளைவாக மாகாணசபைத் தேர்தலை நடாத்தவேண்டிய முறை தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

ஆகையினால் பாராளுமன்றத்தின் ஊடாக அச்சட்டத்தை மீண்டும் திருத்தியமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. எனவே அப்பணிகள் பூர்த்தியடைந்தவுடன் அரசியலமைப்புக்கு அமைவாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அதன் காரணமாகவே கூட்டறிக்கையில் இவ்விடயத்தை உள்ளடக்க வேண்டிய தேவை யாருக்கும் ஏற்படவில்லை' எனவும் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

அதனையடுத்து 'அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும், மாகாணசபைத் தேர்தல்களை நடாத்துமாறும் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியிருக்கிறார். அரசியலமைப்பு அமுலாக்கம் மற்றும் மாகாணசபைத்தேர்தல்கள் என்பன எமது நாட்டின் உள்ளக விவகாரங்களாகும்.

இது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? அதேபோன்று அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் பிரதமர் மோடி குறிப்பிட்டிருக்கிறார். அரசாங்கம் நாட்டு மக்களின் அபிலாஷைகளை ஈடேற்ற வேண்டுமே தவிர, அதனை இனக் குழும அடிப்படையில் நோக்க முடியாது. ஆகவே இவ்விடயத்திலும் அரசாங்கம் கொண்டிருக்கும் நிலைப்பாடு என்ன?' என்று ஊடகவியலாளர் ஒருவரால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலிறுத்த வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத், 'நீங்கள் கூறுகின்ற விடயம் இலங்கை – இந்திய கூட்டறிக்கையில் உள்ளடக்கப் படவில்லை. இந்தியப் பிரதமருக்கு அந்நாட்டு அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பில் கருத்து வெளியிடுவதற்கான உரிமை இருக்கிறது. அதன் பிரகாரம் தான் அவர் தனது கருத்தை வெளியிட்டார்.

இருப்பினும் எமக்கு இடையில் எட்டப்பட்ட இருதரப்பு இணக்கப்பாடுகள் தொடர்பான கூட்டறிக்கையில் அவ்வாறானதொரு விடயம் குறிப்பிடப்படவில்லை. அதற்கான அவசியமும் ஏற்படாது. நாம் இப்போது எமது நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாகவே செயற்படுகின்றோம்.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவது எமது இலக்காக இருக்கிறது. அதுபற்றி நாம் எம்முடைய கொள்கைப் பிரகடனத்திலும் குறிப்பிட்டிருந்தோம். எனவே எதிர் வருங் காலங்களில் விசேடமாக தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இலக்காகக்கொண்டு, சர்வதேச மனித உரிமைகள் பிரகடனங்களின் சரத்துக்களை உள்வாங்கக் கூடியவாறான புதிய அரசியலமைப்பைத் தயாரித்து, அதற்கு நாட்டுமக்களின் ஒப்புதலைப் பெறும் நோக்கில் பயணித்து வருகின்றோம். இதுவே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு' என்றார்.

# மாவீரர் போராளிக் குடும்ப நலன் காப்பகம் அறிவிப்பு!

## மாவீரர் துயிலும் இல்லங்களில் அரசியல் தலையீடுகளுக்கு இடமில்லை!




மாவீரர் துயிலும் இல்லங்களில் அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை என மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் ஏற்பாட்டுக் குழு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

21 டிசம்பர் 2024 சனிககிழமை மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு இணைந்த கலந்துரையாடல் நிகழ்வொன்று நடைபெற்றது. இதில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மூன்று மாவீரர்களின் தாய்மாரை மாவீரர் நாளன்று பொதுச்சுடர் ஏற்றுவதற்கு அழைத்து வரப்பட்ட பின்னர், அவமதித்து வெளியே அனுப்பிய சம்பவம் தொடர்பாக இதன் போது பேசப்பட்டது.

இனி வரும் காலங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படுதல், மாவீரர் துயிலும் இல்லங்களில் அரசியல் தலையீடின்றி மாவீரர் நினைவேந்தல் அனுஷ்டிப்பது மற்றும் மூன்று மாவீரர்களின் தாய்மாரை அவமதித்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் இக்கலந்துரையாடல் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து, மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் தலைவர் தேவராசா தீபன் ஊடக சந்திப்பொன்றை நடத்தினார்.

இதன் போது அவர், எதிர்வரும் காலத்தில் மாவீரர் நினைவேந்தல்களை தாம் பொறுப்பேற்று செய்வதாகவும் அதற்கேற்றவாறு தாம் நிர்வாகங்களை தெரிவு செய்து இனி வரும் காலங்களில் அரசியல் தலைவர்கள் இன்றி, முன்னாள் போராளிகள் தலைமைதாங்கி மாவீரர் நினைவேந்தலை நடத்தவுள்ளதாகவும் அதற்கு முன்னாயத்த கூட்டமாக இந்த கலந்துரையாடல் நடைபெற்றது எனவும் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் யாரும் இந்த நிர்வாகத்தை எதிர்த்து செயற்பட்டால், அவற்றுக்கு முகங் கொடுத்து எமது பணிகளை திறம்பட நிறைவேற்றுவோம் எனவும் திட்டவட்டமாக கூறினார்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை சங்கீத சங்கமம் 2025

# கடன் மறுசீரமைப்பு ஒப்புதல் இலங்கை மதிப்பீட்டை உயர்த்திய மூடிஸ்!




கடந்த வாரம் நாட்டின் கடனாளிகள் 12.55 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்புக்கு ஒப்புதல் அளித்ததை அடுத்து, கடன் தர மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் (Moody's) கடந்த திங்களன்று இலங்கையின் நீண்ட கால வெளிநாட்டு நாணய வெளியீட்டாளர் மதிப்பீட்டை 'Ca' இலிருந்து 'Ca1' ஆக உயர்த்தியது.

இலங்கையின் கடன் விவரம், வெளிப்புற பாதிப்பு மற்றும் அரசாங்கத்தின் பணப்புழக்க அபாயத்தின் குறைப்பு என்பன நிதி மற்றும் கடன் நிலைத் தன்மைக்கான வாய்ப்புகளை பிரதிபலிக்கிறது என்று மூடிஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையின் கடன் அடிப்படைகள் மேம்பட்டுள்ளன. வெளிப்புற பாதிப்பு மற்றும் அரசாங்கத்தின் பணப்புழக்க ஆபத்து இரண்டும் உயர்ந்த மட்டங்களில் இருந்து குறைந்துள்ளன என்று மூடிஸ் அறிக்கை மேலும் கூறியது.

இலங்கை, அதன் அதிக கடன் சுமை மற்றும் குறைந்து வரும் அந்நிய செலாவணி கையிருப்பு காரணமாக 2022 மே மாதம் முதல் முறையாக அதன் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை.

பல தசாப்தங்களில் தீவு நாடு அதன் மோசமான நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதால், அதன் பத்திரதாரர்கள் கடந்த வாரம் அதன் சர்வதேச பத்திரங்களை மறுசீரமைப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்தில் கையெழுத்திட்டனர்.

மதிப்பீட்டு நடவடிக்கையானது கடந்த மாதம் மூடிஸ் தொடங்கப்பட்ட மதிப்பாய்வின் முடிவைக் குறித்தது, அதில் அது சாத்தியமான மேம்படுத்தலைக் குறிக்கிறது.

இதேவேளை ஃபிட்ச் (Fitch Ratings) என்ற மதிப்பீட்டு நிறுவனமானது, இலங்கையின் நீண்டகால வெளிநாட்டு நாணய இயல்பு நிலை மதிப்பீட்டை கட்டுப்படுத்தப்பட்ட இயல்பு நிலை' என்பதிலிருந்து 'CCC+' ஆக உயர்த்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# Dr அர்ச்சுனா பற்றி கம்பவாருதி ஜெயராஜ்



கேள்வி: டாக்டர் அர்ச்சுனாவின் நடவடிக்கைகள் உங்களையும் கவர்கிறதா என்ன?

பதில்: நிச்சயமாக இல்லை! நம் ஊரில் சிலரைப் பற்றிச் சொல்லுகையில் 'அவர் கல்யாண வீட்டிற்குப் போனால் மாப்பிள்ளையாகவும், செத்தவீட்டிற்குப் போனால் பிரேதமாகவும் இருக்கத் தான் விரும்புவார்' என்பார்கள். இவரும் அப்படித் தான் இருப்பது போற தோன்றுகிறது. எங்கு போனாலும் தன்னை முதன்மைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு பிரச்சனைகள் செய்து வருகிறார்.

தனது அதிரடி நடவடிக்கைகளால், குறித்த சில நாட்களுக்குள் தன்னை வளர்த்துக் கொண்டு வெற்றி கண்ட இவர், இனியும் அப்படியே தனது பாதையைத் தொடரலாம் என நினைப்பதுபோற் தெரிகிறது. அப்படி நினைத்தால் அது பெருந் தவறான முடிவாக இருக்கும் என்பது நிச்சயம்.

அவருடைய செயற்பாடுகளில் நாகரீகம் இல்லை. எவரையுமே அவர் மதித்து நடப்பதாய்த் தெரியவில்லை. மற்றவர்களை இழிவு செய்வதன் மூலம் தன்னை அவர் உயர்த்திக் கொள்ள நினைக்கிறார். அளவுக்கு அதிகமான அவரது ஆளுமையை, அவரது குறையென்றே நினைக்கத் தோன்றுகிறது. கிடைத்திருக்கும் திடீர் வெற்றியால் சமநிலை கெட்டுப்போய் இருக்கிறார் அவர்.

பிறேக் இல்லாத வாகனத்தைப் போன்ற அவரது இந்த இயக்கம் ஆபத்தானது. பிறேக் இல்லாத வாகனம், முதலில் மற்றவர்களை இடித்துச் சிதைக்கும். முடிவில் எங்கேனும் போய் மோதித் தன்னையும் அது சிதைத்துக் கொள்ளும்.

அவர் கைதட்டல்களுக்காய் இயங்குவதை விட்டுவிட்டு, கண்ணியமானவராய்ப் பெயரெடுக்க வேண்டும். அது தான் அவருக்கும் நல்லது நம் இனத்துக்கும் நல்லது.

'பெருக்கத்தில் வேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு'என்ற வள்ளுவரின் குறளை அவருக்கு யாரேனும் நினைவூட்ட வேண்டும். சுருக்கத்திலேயே பணிவில்லாமல் இருந்த அவர், பெருக்கத்தில் தலைகால் புரியாமல் ஆட்டம் போடத் தொடங்கியிருக்கிறார். அது அவருக்கே ஆபத்தாய் முடிந்து விடுமோ எனப் பயமாய் இருக்கிறது.

அவரது இந்தச் செயற்பாடுகள், ஆழமில்லாத நம்மவர் பலருக்குப் பிடித்துப் போக, உள்ளூரிலும், வெளிநாடுகளிலுமாகப் பலர், ஊடகங்களினூடு வெகு உற்சாகமாக அவருக்கு 'வால்முறுக்கி' விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டம், ஒருவர் வெற்றி பெறும் வரை அவரைத் தூக்கிப் பிடித்து விட்டு, தோல்வியுற்றதும் 'தொப்' எனப் போட்டு விட்டுப் போய்க் கொண்டேயிருக்கும். அர்ச்சுனா இதனை உணர வேண்டும்.

# கனடாவுக்கு வருகை தந்து ஹரி ஆனந்தசங்கரிக்கு புகழாரம் சூட்டிய ஸ்ரீதரன்

தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கு சர்வதேச ரீதியில் நீதி தேட வேண்டிய தேவை இருப்பதால் அது தொடர்பில் ஈழத் தமிழ் புலம் பெயர் பிரமுகர்கள் ஒன்று பட்டு கூட்டாக செயற்பட வேண்டிய தேவை இருப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கனடாவில் தெரிவித்துள்ளார்.

கனடாவின் முடிக்குரிய பூர்வீகக் குடிகள், வடக்கு விவகாரங்கள் மற்றும் வடக்கு பொருளாதார அபிவிருத்தி நிறுவனங்களுக்கான அலுவல்கள் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி, முடிக்குரிய சுதேசியக் குடிகள் விவகார அமைச்சின் பாராளுமன்ற செயலாளர் ஜேமி பாடிஸ்டி, கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் பிரான்செஸ்கோ சோர்பரா ஆகியோருக்கும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்குமிடையிலான சந்திப்பு கடந்த வார இறுதியில் கனேடிய பாராளுமன்றத்தில் நடைபெற்றது.



இதன் போது இலங்கையில் நடந்தது இனப் படுகொலை தான் என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக் கொள்வதில் பின்னிற்கும் சர்வதேச அரங்கில், ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசால் புரியப்பட்டது இனப்படுகொலை தான் என்றும், இறுதிப்போரின் போது கொல்லப்பட்டோருக்காகவும் மனித உரிமை மீறல்களைச் சந்தித்தோருக்காகவும் நாம் தொடர்ந்தும் நீதி கேட்போம் என்றும் வலியுறுத்தி வருவதன் மூலம் ஈழத்தமிழர்களின் நீதியின் முகமாக கனடாவை அடையாளப்படுத்தும் வகையில் 2022.05.20 ஆம் திகதி கனேடிய பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு காரணமாக இருந்த ஹரி ஆனந்த சங்கரிக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இதன்போது நன்றி தெரிவித்தார்.

அத்துடன் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் குறித்தும் உரையாடியிருந்த சிறிதரன் எம்.பி. ஈழத்தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் சர்வதேச செயற்பாடுகளில் அமைச்சர் ஹரியின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகவும் அவசியமென்று சுட்டிக்காட்டினார்.

அதேபோல் எதிர்காலத்தில் தமிழர் விவகாரங்களில் ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியத்தையும் சிறிதரன் எம்.பி இங்கு வலியுறுத்தியுள்ளார். இன்னும் எத்தனை காலம் தான் இவர்கள் மாவீரர், தேசியம், இனப்படுகொலை என்ற சொல்லாடலை வைத்து பிழைப்பு நடத்துவார்களோ?

# சுதந்திர இலங்கையில் அனைவருக்குமான அரசியல் யாப்பு இன்னமும் உருவாக்கப்படவில்லை

(8ம் பக்கத் தொடர்ச்சி) இடைக்கால அறிக்கையில் குறித்த விடயம் சம்பந்தமாக இறுதியான முடிவொன்று எடுக்கப்படவில்லை. ஆகவே அந்த விடயம் சம்பந்தமாக கலந்துரையாடல்களை முன்னெடுத்து இணக்கப்பாடொன்றை முன்னெடுக்க முடியும். அதுவொரு தீர்க்கப்பட முடியாத விடயம் அல்ல.

புதிய அரசியலமைப்பில் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக இனங்கள் நாட்டின் பிரஜைகள் என்ற விடயமும் அவர்களுக்கு சமத்துவமான உரித்துக்கள் உள்ளன என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே அடிப்படையான விடயமாக இருக்கின்றன. இந்த நிலைமை உருவாக்கப்படுகின்ற போது ஏனைய விடயங்களில் இலகுவாக இணக்கப்பாடுகளை எட்ட முடியும்.

# தமிழரசுக்கட்சிக்கு 75 வயது

(15ம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இறந்த காலத்தில் இருந்து கற்றுக் கொள்ளாத ஒரு காலம் தான். அவர்கள் தங்கள் கட்சிகளையும் தோற்கடித்திருக்கிறார்கள் தமிழ் மக்களையும் தோற்கடித்து விட்டார்கள். தேசத்தைத் திரட்டா விட்டால் கட்சிகளையும் திரட்டமுடியாது என்பதனை நடந்துமுடிந்த தேர்தல் நிரூபித்திருக்கிறது.

இப்படிப்பட்டதோர் தோல்விகரமான அரசியல் பின்னணியில் தமிழரசுக் கட்சியின் 75ஆவது ஆண்டு நிறைவு என்பது அது தன் இறுதி இலட்சியமாகிய சமஸ்டியை வெல்லத் தவறிய மற்றொரு ஆண்டுதான். அதாவது, சமஸ்ரியை அடையாத 75ஆவது ஆண்டு. கட்சி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் ஓராண்டு. தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவம் மேலும் சுருங்கிப் போயிருக்கும் ஓராண்டு. நிச்சயமாக அது கொண்டாடப்படத்தக்க பவள விழா ஆண்டு அல்ல.

# சுதந்திர இலங்கையில் அனைவருக்குமான அரசியல் யாப்பு இன்னமும் உருவாக்கப்படவில்லை - லால் விஜயநாயக்க

சுதந்திர இலங்கையில் அனைத்து இனக்குழுமங்களும் ஏற்றுக் கொள்கின்ற அரசியல் யாப்பொன்று இன்னமும் உருவாக்கப்படவில்லை என்று சட்டத்தரணி லால் விஜயநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் புதிய அரசியல்யாப்பொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியுள்ள அவர், அதில் அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகள் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.



மேலும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல்களின் போது அளித்த வாக்குறுதிக்கு அமைவாக புதிய அரசியலமைப்புக்கான செயற்பாட்டின் போது மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையை சீர்தூர்க்கிப் பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2016ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்காக அப்போதைய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவராகச் செயற்பட்டவர் சட்டத்தரணி லால் விஜயநாயக்க. இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் புதிய அரசியலமைப்பு விடயங்களை முன்னெடுப்பது பற்றிய கரிசனைகளைக் காண்பித்துள்ள நிலையில் புதிய அரசியலமைப்புக்கான செயற்பாடுகளில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தாலும் தற்போது வரையில் நாட்டில் உள்ள பல்லினங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பொன்று உருவாக்கப்படவில்லை என்பது துரதிஷ்டவசமான நிலைமையாகும்.

குறிப்பாக, 1948இல் சுதந்திரம் அடைந்ததன் பின்னர் பிரித்தானியா அறிமுகப்படுத்திய சோல்பரி யாப்பே அமுலாக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 1949இல் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டதால் மலையக மக்கள் நாடற்றவர்களாக மாற்றப்பட்டனர்.

அதன் பின்னர் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டு இனங்களுக்கு இடையிலான விரிசல் வெகுவாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனையடுத்து 1972ஆம் ஆண்டு குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டாலும் கூட அதில் அனைத்தின மக்களையும் உள்வாங்கவில்லை.

குறிப்பாக தமிழ் மக்கள் அந்த யாப்பு உருவாக்கத்துக்குள் உள்வாங்கப்படவில்லை. 1978ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பில் இந்த நிலைமை மேலும் மோசமடைந்தது.

இதனால் இனங்களுக்கு இடையிலான விரிசல்கள் அதிகரித்து போர் நிலைமைகள் தீவிரமடைந்தது. அது முப்பது ஆண்டுகள் வரையில் நீடித்திருக்கிறது. இவ்வாறான நிலையில் தற்போது வரையில் அமுலில் இருக்கின்ற யாப்பில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன.

எனினும், அந்த யாப்பில் நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கான இனச்சமத்துவ அந்தஸ்து வழங்கப்படவில்லை. ஆகவே குறித்த யாப்பினை அனைவரும் ஏற்றுக்கொள்ளாத நிலைமை நீடிப்பதோடு இலங்கையர் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்தாத நிலைமையும் தொடருகின்றது.

இவ்வாறானதொரு சூழலில் புதிய அரசியலமைப்பொன்று நாட்டுக்கு அவசியம் தேவையாக உள்ளது. அந்த அரசியலமைப்பானது, நாட்டின் பல்லினச் சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதாக இருப்பதோடு அனைவரும் இலங்கையர் என்ற அடையாளத்தினை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைய வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

அயல்நாடான இந்தியா பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரத்தினைப் பெற்றதன் பின்னர் தனக்கென்று ஒரு யாப்பினை உருவாக்கியது.

நூற்றுக்கணக்கான மொழிகள், இனங்கள் என்று சிக்கலான நிலமைகளைக் கொண்டிருந்தாலும் அனைவரும் இந்தியர்கள் என்ற அடையாளத்தினை அந்த யாப்பு ஏற்படுத்தியிருக்கின்றமையானது எம்முன்னுள்ள பெரும் உதாரணமாகும். அந்த வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தேர்தல் காலத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்ற விடயத்தினை உறுதியாகக் கூறியிருந்தார். அந்தப் பணிகளை அவர் தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டிய அதேவேளை, எனது தலைமையில் உருவாக்கப்பட்டிருந்த மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

ஏனென்றால், குறித்த அறிக்கையானது நாட்டில் உள்ள அனைத்து இனக்குழுமங்களைச் சேர்ந்தவர்களினது கருத்துக்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. எனது தலைமையிலான குழுவினர் சமயத் தலைவர்கள், சிவில் அமைப்பினர் மற்றும் சாதாரண பொதுமக்கள் என்று அனைவரையும் சந்தித்து அவர்களின் கருத்துக்களைப் பெற்றே இறுதி அறிக்கையை கையளித்திருக்கின்றோம்.

குறிப்பாக தற்போதைய பிரதமர் கலாநிதி.ஹரிணி அமரசூரியவும் அந்தக் குழுவில் பங்கேற்றிருந்தமை விசேடமானதாகும். ஆகவே, மக்களின் கருத்துக்களை மையப்படுத்திய புதிய அரசியலமைப்பை உருவாக்குவதன் மூலமாகவே சமத்துவ அந்தஸ்தை யாப்பு ரீதியாக உறுதிப்படுத்த முடியும் என்றார்.

கேள்வி: ஏலவே வெளியிடப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில் 'நாட்டின் தன்மை' சிங்கள மொழியில் 'ஏக்கிய ராஜ்ய' என்றும் தமிழ் மொழியில் 'ஒருமித்த நாடு' என்றும் மாறுபட்டுக் காணப்படுகின்ற நிலைமையில் அந்த விடயத்தில் முரண்பாடானதொரு சூழல் நீடிக்கின்றதே?

பதில்: ஏலவே வெளியிடப்பட்டுள்ள

(7ம் பக்கம் பார்க்க)




# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு காணப்பட வேண்டும் என்று தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையில் புதிய அரசியலமைப்பின் மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சுவிட்சர்லாந்தின் வெளிவிவகாரங்களுக்கான சமஷ்டித் திணைக்களத்தின் சமாதானம் மற்றும் மனித உரிமைகள் பிரிவுக்கான இராஜாங்க துணை செயலாளர் டிம் எண்டர்லின், தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. ஆட்சி மாற்றத்துக்கு பின்னரான நிலைமைகள் புதிய அரசாங்கத்தின் மீதான எதிர்பார்ப்புக்கள் தொடர்பிலும் இந்த சந்திப்பில் ஆராயப்பட்டிருக்கின்றது. இதன் போது கருத்து தெரிவித்த தமிழ் தேசியக்கட்சிகளின் பிரதிநிதிகள், சமஷ்டி அடிப்படையிலான தீர்வை காண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கின்றனர்.

எம்மைப் பொறுத்தவரையில் 13 ஆவது திருத்த சட்டமும் மாகாண சபை முறைமையும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்கின்ற விடயமொன்றல்ல. இருப்பினும் அரசாங்கமானது மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தி அக்கட்டமைப்பை விணைத்திறான செயற்படுத்துவதற்கு இடமளிப்பதன் மூலமாக தங்களது அதிகாரப் பகிர்வுக்கான சமிஞ்சையை வெளிப்படுத்த முடியும் என்று கருதுகிறோம் தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இந்த சந்திப்பில் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இந்த சந்திப்புக்கு முன்னராக கடந்த 4ஆம் திகதி இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து பேசியிருந்தனர். ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டிருந்தது.

இதன் போது தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், இணைந்த வடக்கு, கிழக்கில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக உள்ளது என்று ஜனாதிபதிக்கு எடுத்துக்' கூறியிருக்கின்றனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, இனப்பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பின் மூலம் தீர்வு காணப்படும் என்று உறுதி வழங்கியதுடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் போது அதில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு உள்வாங்கப்படும். அதன் உருவாக்கப்பணிகள் முன்னெடுக்கப்படும் போது தமிழ் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இதுபற்றி நிச்சயமாக கலந்துரையாடப்படும் எனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இதனை விட புதிய அரசியலமைப்பானது பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் அமையாது. மாறாக, இலங்கை எனும் ஒருமித்த நாட்டை முன்னிறுத்துவதாக அமையும் என்றும் ஜனாதிபதி எடுத்துக் கூறியுள்ளார். புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படும் வரையில் 13ஆவது திருத்த சட்டமும் மாகாணசபை முறைமையும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். அடுத்த வருடம் இறுதிப்பகுதியில் மாகாணசபைகளு



க்கான தேர்தல் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி இதன் போது உறுதியளித்துள்ளார்.

இந்த விடயங்களிலிருந்து தமிழ் தேசியக்கட்சிகளின் தலைவர்கள் சமஷ்டி தீர்வை கோருவதும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது புதிய அரசியலமைப்பில் அது தொடர்பில் ஆராயப்படும் என்று கூறுவதும் நன்கு புலனாகின்றது.

உண்மையிலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமானால் அதற்கான செயற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். இதனை விடுத்து புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும், அதன் போது அரசியல் தீர்வு குறித்து கலந்துரையாடலாம் என்று அரசாங்கத்தரப்பு கூறுவதானது காலத்தை இழுத்தடிப்பதற்கான முயற்சியாகவே அமையும்.

அண்மையில் அமைச்சரவையின் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கருத்து தெரிவிக்கையில் மூன்று வருடங்களின் பின்னர் புதிய அரசியலமைப்புக்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். இதிலிருந்து தற்போதைக்கு அரசியலமைப்பு குறித்தோ அரசியல் தீர்வு குறித்தோ அரசாங்கம் ஆராயப் போவதில்லை என்பது நன்கு தெளிவாகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் அண்மையில் இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்திருந்தார். தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதார மீட்சி தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. மூன்று நான்கு மாதங்களுக்குப் பின்னரே அரசியல் தீர்வு தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய போது புதிய அரசியலமைப்புக்கான முயற்சிகள் எப்போது நடைபெறும் என்றோ அல்லது அதற்கான கால எல்லை குறித்தோ அவர் எந்தவித கருத்துக்களையும் தெரிவித்திருக்கவில்லை. ஆனாலும் புதிய அரசியலமைப்பின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றே அவர் கூறியிருந்தார்.

தேசிய மக்கள் சக்தியானது ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போதே இந்த விடயத்தை தெரிவித்திருந்தது. அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும் அதுவரை மாகாணசபை முறைமை அமுல்படுத்தப்படும் எனவும் உறுதி வழங்கப்பட்டிருந்தது.


நல்லாட்சி அரசாங்க காலத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சிகளை முன்கொண்டு சென்று அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய நிலையில் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியானது 159 ஆசனங்களைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியை முன்னெடுத்து வருகின்றது. வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட்ட பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மையான மக்கள் வாக்களித்திருக்கின்றனர். அதேபோன்று தெற்கிலும் பெரும்பான்மையான சிங்கள மக்கள் தேசிய மக்கள் சக்தியை ஆதரித்திருக்கின்றனர்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியானது மூவின மக்களினதும் பேராதரவைப் பெற்றுள்ள நிலையில் பாராளுமன்றத்திலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டுள்ள சூழலில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான முயற்சியை முன்னெடுப்பதும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை காண்பதும் இலகுவான விடயமாகவே காணப்படுகின்றது.

இதனை விட இன, மதவாதத்துக்கு தற்போது இடமில்லாத நிலைமை உருவாகியிருக்கின்றது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க் கட்சியினர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற விடயத்தில் ஆதரவான நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றனர். எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட்டோர் அரசியல் தீர்வுக்கு ஆதரவு வழங்குவதற்கு தயாராகவே உள்ளனர். எனவே காலம் தாழ்த்தாது அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களையும் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கையிலும் அரசாங்கம் (22ம் பக்கம் பார்க்க)


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

“இணுவில் திருவூர்”

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. "தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

06 டிசம்பர் 2024 - 20 டிசம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 32வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பர் பொன்னுத்துரை
### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 32வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2025 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 27 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகநாதன் பொன்னுத்துரை

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது ஒன்பதாவது ஆன்டு நினைவு நாள் 28 டிசம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 41வது பிறந்த நாள் நினைவாக



### திரு ஈசாந்தன் இராமலிங்கம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு ஈசாந்தன் இராமலிங்கம் அவர்களது 41வது பிறந்த நாள் 20 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமை ஆகும். அன்றையதினம் அன்னாரது பிறந்த நாள் நினைவாக அவரது துணைவியார் திருமதி லக்ஷனா ஈசாந்தன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார். திரு ஈசாந்தன் அவர்களது பிறந்த நாளில் அவரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 37வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சரவணமுத்து நமசிவாயம்

பண்ணாகம் தெற்கு சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களான திரு சரவணமுத்து நமசிவாயம் அவர்களதும் திரு சரவணமுத்து அருளம்பலம் அவர்களதும் 37வது ஆண்டு நினைவு நாள் 26 டிசம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது மகன் ரமணன் நமசிவாயம் இருவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ச.நமசிவாயம், திரு ச.அருளம்பலம் ஆகியோரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன்இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு பகீரதன் முத்துக்குமாரசாமி

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பகீரதன் முத்துக்குமாரசாமி அவர்களது 31ம் நாள் நினைவு தினம் 18 டிசம்பர் 2024 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். பகீரதன் முத்துக்குமாரசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது, 3வது ஆண்டு நினைவஞ்சலி





### திருமதி பாலசிங்கம் சிவமணி
### திரு செல்லப்பா பாலசிங்கம்

யாழ்.அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவமணி பாலசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 24 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது கணவர் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களையும் (3வது ஆண்டு நினைவு நாள்) நினைவு கூர்ந்து அன்னாரது குடும்பத்தினர் இருவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவமணி பாலசிங்கம் அவர்களையும் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களையும் நினைவு கூர்ந்து அன்னார்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



23 டிசம்பர் 2024 திங்கட்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



24 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்தவர்களான திருமதி சிவமணி பாலசிங்கம் அவர்களது 1வது ஆண்டு நினைவு நாளும் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளுமாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 டிசம்பர் 2024 தன்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளில் அன்னாரது கணவர் திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களையும் நினைவு கூர்ந்து அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 டிசம்பர் 2024 ர்புதன்கிழமை நத்தார் தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



25 டிசம்பர் 2024 ர்புதன்கிழமை நத்தார் தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



25 டிசம்பர் 2024 ர்புதன்கிழமை நத்தார் தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



26 டிசம்பர் 2024 வியாழக்கிழமை பண்ணாகம் தெற்கு சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களாக திரு சரவணமுத்து நமசிவாயம் திரு சரவணமுத்து அருளம்பலம் ஆகியோரது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் திரு நமசிவாயம் அவர்களது மகன் திரு ரமணன் அவர்கள் அன்னார்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.



27 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமை யாழ். உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



20 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி யேசுதாசன் அந்தோனிப்பிள்ளை ஜெஸ்மின் இணையரது 38வது திருமண நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்

## 36வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் முகுந்தன் நந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி நந்தகுமார் ஞானகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகுந்தன் நந்தகுமார் அவர்களின் 36வது பிறந்த நன்நாள் 28 டிசம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் செல்வன் முகுந்தன் நந்தகுமார் தனது பெற்றோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார். அகவை 36 காணும் செல்வன் முகுந்தன் நோய் நொடியின்றி அனைத்து வளங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து வாழ்த்துகின்றார்கள். முகுந்தன் வாழ்க வளமுடன்!

உ

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா


# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada Tel: 416-321-6104 Fax: 416-321-7557 www.ayyappan.ca

Facebook: Canada Sri Ayyappan Hindu Temple

## மண்டல மகர விரத விஞ்ஞாபனம்



## ஐயப்பன் மாலை அணியும் வைபவம்

## 16-11-2024 சனிக்கிழமை

ஐயப்பன் மெய்யடியார்களே!

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2024 சனிக்கிழமை அதிகாலை 7.00 மணிக்கு கணபதி ஹோமம். தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 8.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும்.

மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல விரதகாலத்தில் பக்திசிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்ப பூஜை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்த வரை மண்டலபூஜை உபயங்களைப் பொறுப்பேற்றுச் சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

*முக்கிய குறிப்பு: கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்

## MANDALA MAKARA VIRATHAM AND AYYAPPAN SACRED THULASI MALAI WEARING FESTIVAL

**Mandala Makara Viratha & Sacred Thulasi Mala Wearing Festival shall be held at canada Sri Ayyappan Hindu Temple, on Saturday, November 16, 2024 Starting with Ganapathy Homam at 7.00am, followed by Sastha Homam and Thulasi Mala Wearing from 8.30am to 8.00pm.**



***Note: Please don't use phones inside the TEMPLE**

*இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர்சபை*

# நினைவழியா நினைவுகளுடன் பிருதிவிராஜ் சிவசுப்பிரமணியம்

# In Loving Memory of Prithiviraj Sivasubramaniam

It is with profound sadness that we announce the passing of Prithiviraj Sivasubramaniam, fondly known as Raji, a beloved son, brother, uncle, and dear friend, as well as a dedicated advocate and pillar of our com munity. Raji was a truly remar kable individual, whose life was defined by his passion for hel ping others and his remarkable dedication to his family, friends, and community.

Raji was a charismatic and compassionate leader, deeply involved in politics and com mitted to advocating for his community. His commitment to justice and equality earned him profound respect and admiration from everyone he encountered. Raji's efforts to create meanin gful change around his com munity touched countless lives. Whether working for justice, advocating important causes, or offering support and encourage ment to those around him, Raji approached everything he did with boundless passion and integrity. Through his acts of service, he fostered genuine connections and upheld the values he deeply cherished, leaving behind a lasting impact in our community.



Beyond his public contributions, Raji was a devoted family member who cherished his role as a loving and supportive son. He was a mentor to many, always ready with words of wisdom and a helping hand. His ability to inspire, connect, and uplift those around him was truly admired.

Every photograph tells a story, and Raji's lens had a way of capturing not just personal memories, but the moments he deeply connected with his everdriven passion for his



community. Raji, as a photo grapher, made ordinary momen ts become significant memories. In his passing, his photographs become a lasting testament to his life, immortalizing the mea ningful memories that we will carry in our hearts, minds and souls for the rest of our lives.

We extend our heartfelt con dolences to Raji's family, friends, and all who were blessed to know him.The values he held will guide us as we honor his memory in our own lives. Raji will be deeply missed, but his legacy will continue to inspire and live on within us forever. May his soul rest in peace.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





காணத் தயாராகுங்கள்!
Association of Past Business Owners of Sri Lanka
Canada
இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா
PRESENTS
12 வது ஆண்டிவில்
வர்த்தக தீபம்
2024
12TH ANNUAL
Winter Get-Together
AWARDS | DINNER | ENTERTAINMENT
தித்திக்கும் தீந்தமிழ் இயல் இசைகளின் சங்கமம்
Mega Tuners
K2B
மெகா ரியூனெர்ஸின் இன்னிசை கானங்கள், ரொறன்டோவின் முன்னணி நடன ஆசிரியர்கள், K2B டான்ஸ் குறூப் மாணவ மாணவிகளின் கண்கவர் நடனங்கள், மற்றும் பல நிகழ்வுகள்.....
DEC 29 2024
SUNDAY 6:00 PM
SCARBOROUGH CONVENTION CENTRE
20 TORHAM PLACE,
SCARBOROUGH, ON. M1X 1E3
வர்த்தகர்கள் மதிப்பளிப்பு
காதுக்கினிய இன்னிசைக் கானங்கள்
கண்ணுக்கினிய நடனங்கள்
நாவிற்கினிய அறுசுவை உணவுகள்
கண்டு களித்து உண்டு மகிழ்வதோடு தாயகத்தில் வாழ்வாதாரமற்ற குழந்தைகளின் மேம்பாட்டிற்கு உதவிட அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.
அன்பளிப்பு $60
SOMA SATCHITHANANDAN
President
647.202.3234
SOTHY SELLA
Secretary
647.409.8966
KATHIRAVEL KARUNANANTHAN
Treasurer
416.970.3182
வல்லவர் தொழில் வர்த்தகத்துறை

# தமிழரசுக்கட்சிக்கு 75 வயது

கடந்த புதன்கிழமை தமிழரசுக் கட்சி அதன் 75 ஆவது ஆண்டை நிறைவு செய்தது.கடந்த புதன்கிழமை அதை விமரிசையாகக் கொண்டாட முடிய வில்லை என்று அதன் தொண்டர்கள் சிலர் கவலைப்பட்டுக் கொண்டார்கள். ஏன் கொண்டாட முடியவில்லை? 75 ஆண்டுகள் எனப்படுவது ஒரு மனித னின் முழு அயுளுக்குக் கிட்டவரும். இந்த 75ஆண்டு காலப்பகுதிக்குள் தமிழரசுக் கட்சி சாதித்தவை எவை? சாதிக்காதவை எவை?

இப்பொழுதுள்ள தமிழ்த்தேசியக் கட்சி களில் பெரிய கட்சி அது. நாடாளு மன்றத்தில் அதிக ஆசனங்களை வென் றிருக்கும் கட்சியும் அது.ஒரு விதத்தில் தாங்களே தலைமை சக்தி என்ற பொருள்பட சுமந்திரன் கூறிக்கொள்வார். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்மக்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் முடிவுகளை எடுக்கும் பொறுப்பில் இருந்த ஒரு கட்சி எப்படிப்பட்ட முடிவுகளை எடுத்தது?அந்த முடிவு களின் விளைவாக தமிழ்மக்களுக்கு கிடைத்தவை எவை? கிடைக்காதவை எவை?

இந்தக் கேள்விக்கு ஒரு குறியீட்டுப் பதிலைச் சொல்லலாம். தந்தை செல்வா வின் நினைவுத் தூபி அமைந்திருக்கும் வளாகத்தைச் சுற்றிப் பார்த்தால் கட்சி யின் நிலையை. கட்சியால் வழி நடத் தப்பட்ட அரசியலின் நிலையை அது குறியீடாக வெளிப்படுத்தும். அந்த சிலையைச் சுற்றியிருக்கும் வளாகம் தொடர்ச்சியாக பராமரிக்கப்படுவதில்லை. பெரும்பாலான காலம் அதைச் சுற்றி பற்றைகள் புல்பூண்டுகள் மண்டிக் கிடக்கும். அந்த சிலைக்கு ஏறிப்போகும் உலோகப் படிக்கட்டு துருப்பிடித்துக் கிடக்கிறது. அந்த வளாகத்தின் வாசலில் உள்ள கேற். அதன் பூட்டு எல்லாமே துருப் பிடித்துள்ளன. அவ்வப்போது அந்தச் சிலைக்கு மரியாதை செலுத்தச் செல்லும் கட்சித் தலைவர்களும் தொண் டர்களும் அதைக் குறித்த எந்த விவஸ் த்தையுமின்றி அந்தப் பற்றைகளின் பின்னணியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள்.

அந்த வளாகத்தைச் சுத்தமாக அழகாகப் பேண வேண்டும் என்று ஏன் யாருக்கும் தோன்றவில்லை? கட்சியின் ஸ்தாபகரின் சிலை. அவரை தந்தை என்று அழை க்கிறோம். ஆனால் அந்த சிலையை ஒரு நினைவிடமாக அதற்குரிய மதிப் போடு பேண ஏன் கட்சியால் முடிய வில்லை?

இது ஒரு குறியீடு. கட்சியின் தற் போதைய நிலையைக் காட்ட இது உதவும். தமிழரசு கட்சி தூர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தில் நிற்கின்றது. கட்சியின் தலைவர் யார் என்பதில் தடுமாற்றம். கடந்த 18ஆம் திகதி வவுனியாவில் நடந்த மத்திய செயற்குழு கூட்டம் கட்சி எந்தளவுக்குச் சிதைந்து கொண்டிருக்கிறது என்ப தனைக் காட்டியது.

கட்சிக்குள் ஒன்றை மற்றது பிடித்துத் தின்னும் பகைக் குழுக்கள் தோன்றி விட்டன. இந்த குழுக்களுக்கு இடை யிலான பகையானது கட்சியின் வெளி எதிரிகளுடன் உள்ள பகையைவிடவும் மூர்க்கமானதாகவும் பழிவாங்கும் உணர்ச்சி மிக்கதாகவும் காணப்படு கின்றது. கடந்த ஆண்டு தமிழரசுக் கட்சியின் 75 ஆண்டுகளில் மிகத் தோல்விகரமான ஆண்டுகளில் ஒன்று. கட்சிக்காரர்களே கட்சியை நீதிமன்றத் தில் நிறுத்திய ஆண்டு.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரே சுவரொட்டியில் ஒன்றாகத் தோன்றிய கட்சி முக்கியஸ்தர்கள் உள்ளூரில் பிரச்சாரம் செய்யும் பொழுது ஒருவர் மற்றவருக்கு எதிராகப் பிரச் சாரம் செய்தார்கள். ஒருவர் மற்றவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களி டம் கேட்டுக் கொண்டார்கள். உட்பகை கட்சியை படிப்படியாகத் தின்று கொண் டிருக்கிறது. கட்சி ஒரு கட்டுக்கோப் பான உருகிப்பிணைந்த கட்டமைப் பாக இல்லை. அங்கே கூட்டுணர்வு இல்லை.

ஆனால் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிக்குத் தான் அதிக ஆசனங்கள் கிடைத்தன. அதனைக் கட்சி ஒரு பெருமையாகக் கருது கின்றது. ஆனால் துயரம் என்னவென் றால். கட்சிக்கு கிடைத்த அதேயளவு ஆசனங்கள் அரசாங்கத்திற்கும் கிடை த்திருக்கின்றன என்பது தான். அரசாங் கத்தின் துணை வெளிவிவகார அமை ச்சரும் திருகோணமலைத் தமிழரு மாகிய அருண் ஹேமச்சந்திர அண்மையில் ஓர் ஊடக நேர்காணலில் கேட்கிறார் தமிழ் தரப்பு என்பது இப்பொழுது யார் என்ற பொருள்பட. ஏனென்றால் அரசாங்கத்திடம் 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு.



முன்னெடுக்கவில்லை? மாறாக கட்சிக் காரர்களே ஒருவர் மற்றவருக்கு எதிராக கட்சியை நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தும் ஒரு நிலைமை ஏன் தோன்றியது? மூத்த உறுப்பினராகிய சிவஞானத்தை. இளம் நாடாளுமன்ற உறுப்பினராகிய அர்ஜுனா நீங்கள் யார்? என்று கேட்கும் ஒரு நிலைமை தமிழரசியலில் ஏன் தோன்றியது?

இந்த தோல்விகள் அனைத்துக்கும் முழுப்பொறுப்பு முதலாவதாக சம்பந்தர். இரண்டாவதாக சுமந்திரன். மூன்றா வதாக மாவை. நாலாவதாக. இவர்கள் அனைவருடைய செயல்களையும் ஆத ரித்த அல்லது தங்களுக்குள் புறுபுறுத் துக் கொண்டு எதிர்க்காமலிருந்த எல்லா மூத்த உறுப்பினர்களும் பொறுப்பு. சிறீதரனும் பொறுப்பு. இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சித் தொண்டர்கள் சிறீதரனின் கையில் கொடுத்த பொறு ப்பை அவர் சரியாகக் கையாளவில்லை. அவர் எதற்கோ தயங்குகிறார்.

இதுதான் 75 ஆவது ஆண்டு முடிவில் கட்சியின் நிலை. கட்சிக்குள் உறுதியான தலைமைத்துவம் இல்லை. கட்சி இரண்டாகி நிற்கிறது. வாக்காளர்களின் இன உணர்வுக்கு நெருக்கமாக ஒரு பகுதி. கொழும்பை நோக்கிச் சாயும் இன்னொரு பகுதி. தமிழரசு கட்சிக்குள் காலாகாலமாக இந்த இரண்டு போக்கு களும் இருந்தன. ஒரு போக்கு வாக் காளர்களுக்கு நெருக்கமாக இருப்பது. இன்னொன்று கொழும்பை நோக்கிச் சாய்வது. இந்த இரண்டு போக்குகளின தும் கலவை தான் தமிழரசுக் கட்சி.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறையின் தலைவராக இருந்த கலாநிதி ராமகிருஷ்ணன் சொல்வாராம் ஒரு பனங்காட்டானைத் தலைவனாகத் தெரிந் தால் அவர் வாக்காளர்களின் சொற் கேட்பார் என்று. அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோது அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் பனங்காட்டான் என்று கருதியது யாழ்ப்பாணத்தவர்களை மட்டுமல்ல. தன் வாக்காளர்கள் மத்தியில் வீடு வாசல். சொத்துக்களைக் கொண்டிருக்கும் மக்கள் பிரதிநிதியைத்தான். கொழும்பு மையத் தமிழ்த் தலைமைகளுக்கு எதிராகவே அவர் அவ்வாறு கூறுவாராம்.

இந்த இரண்டு போக்குகளும் ஒன்று

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



மற்றதை இட்டு நிரப்பி கட்சியின் தலை மைப் பீடத்தை நிர்வாகித்து வந்தன. ஆனால் கடந்த 15 ஆண்டுகளில் இந்த இரண்டு போக்குகளுக்கும் இடை யிலான மோதல் கட்சியை உருக்குலை த்து விட்டது. இது ரெண்டாயிரத்தி ஒன்பதுக்குப் பின்னரான தமிழ் கூட்டு உளவியலின் விளைவு.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக் குள் நடந்த தேர்தலில் சுமந்திரன் கட்சிக்காரர்களால் தோற்கடிக்கப்பட்டார். அந்த தோல்வியை அவர் நாகரீகமாக ஏற்றுக்கொண்டது போல வெளியில் காட்டிக்கொண்டார். ஆனால் அவர் அந்தத் தோல்வியை தாங்கிக் கொள்ள வில்லை என்பதைத் தான் பின்வந்த நடவடிக்கைகள் நிரூபித்தன. ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்காரர்கள் அவரை தோற்கடித்தார்கள் ஆண்டின் முடிவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அவரைத் தோற்கடித்தார்கள். கட்சிக்குள் தலைமைப் போட்டியை அவர் கையாண்ட விதத்தை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை அந்தத் தீர்ப்புக் காட்டியதா?

ஆனால் இரண்டு தோல்விகளையும் அவர் ஜீரணித்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அவற்றிலிருந்து அவர் கற்றுக் கொண்டதாகவும் தெரிய வில்லை. ஏனென்றால் கடந்த 18ஆம் திகதி வவுனியாவில் நடந்த கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் அதைத் தான் உணர்த்துகின்றது. அதாவது கட்சி தொடர்ந்தும் நீதிமன்றத்தில் நிற்கப்போகிறது என்று தெரிகிறது. மருத்துவர் சிவமோகனும் புதிதாக ஒரு வழக்கைப் போட்டிருக்கிறார்.

எனவே கடந்த 75 ஆண்டுகளையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் தமிழரசுக் கட்சி ஒரு வெற்றி பெறாத கட்சிதான். அது கட்சியாகவும் தோற்றுவிட்டது.த மிழ் மக்களையும் தோற்கடித்து விட்டது. சம்பந்தர் இறக்கும்பொழுது தோல்வியுற்ற தலைவராகவே இறந்தார். யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் அவருடைய பூதவுடலு க்கு கிடைத்த இறுதி மரியாதை அதற் குச் சான்று. ஆனால் அதிலிருந்தும் கூட கட்சியின் மூத்த தலைவர்கள் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

கடந்த 15 ஆண்டுகாலம் என்பது தமிழரசுக் கட்சி மட்டுமல்ல பெரும் பாலான

தமிழர் தாயகத்தில் மொத்தம் எட்டுப் பேர்.இவர்கள் அனைவரும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. தமிழ்த் தேசிய நிலைப் பாட்டை பிரதிநிதித்துவப்படுத்து கின்றவர்கள் மொத்தம்10 பேர் தான். அர்ஜுனா எந்தப் பக்கம் நிற்பார் என்று தீர்மானமாகக் கூறமுடியாது. எனவே மொத்தத் தமிழ் தேசிய பிரதிநிதித்துவம் பத்தாகச் சுருங்கியுள்ளது. அதனால் தான் அருண் ஹேமச்சந்திர கேட்கிறார். எது தமிழ் தரப்பு என்று. அதாவது தமிழ்த் தேசியத் தரப்பு மட்டும் இப்பொழுது தமிழ்த் தரப்பு அல்ல என்ற பொருளில்.

தமிழரசியலுக்கு குறிப்பாக. தமிழ்த் தேசிய அரசியலுக்குத் தலைமை தாங் கும் ஒரு கட்சி என்று பெருமை பாராட்டிக்கொள்ளும் ஒரு கட்சியானது இதற்குப் பதில்சொல்ல வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 22 ஆசனங்களை கொண்டிருந்தது. அது இப்பொழுது பத்தாகச் சுருங்கிவிட்டது. இது தோல்வி. ஆனால் கட்சிக்காரர்கள் கடந்த தேர்தலில் கிடைத்த அற்ப வெற்றியைக் கொண்டாடுவதாகத் தெரி கிறது. ஒட்டுமொத்த தமிழ்த்தேசிய ஆசனங்கள் குறைந்திருக்கின்றன. நாடாளுமன்றத்தில் ஒரு தேசமாக தமிழ் மக்கள் மேலும் மெலிந்திருக்கிறார்கள்.

கடந்த மாதத்தின் நடுப்பகுதி வரை யிலும் முழு நாட்டிலிருந்தும் வெளி யேறியவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்தை விட அதிகம். இதில் எத்தனை பேர் தமிழர்கள்? அவர்கள் வெளியேறுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் அது தமிழ்த் தேசியவாத அரசியலின் தோல்விகளில் ஒன்று. வாக்காளர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். தன்னைத் தலைமை தாங்கும் சக்தியாகக் கருதும் தமிழரசுக் கட்சி இவை எல்லாவற்றை யும் கவனத்தில் எடுத்து தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலை தேசத்தைத் திரட்டும் அரசியலை ஏன்

(7ம் பக்கம் பார்க்க)


## வேது ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்**

**திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது வேது ஆண்டு நினைவு நாளையொட்டியும் கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 25 டிசம்பர் 2024 புதன்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி னார்கள். இணையர்கள் இருவரையும் நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தை களும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# திரும்பத் திரும்ப கேட்கும் வாக்குறுதி!

இந்தியாவின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலும் எங்கள் நிலத்தை எந்த வகையிலும் பயன்படுத்த, எவரையும் அனுமதிக்கமாட்டோம். இது புதுடெல்லியில் இந்தியப் பிரதமருடன் இணைந்து நடத்திய கூட்டு ஊடக சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறிய உறுதிமொழியாகும்.

இலங்கையில் ஆட்சித் தலைமையை ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொரு தலைவரும், புதுடெல்லிக்கு பயணம் மேற்கொள்ளுகின்ற போது, இந்த உறுதிமொழியை வழங்குவது வழமையான ஒன்று.

இது ஜே.ஆர்.ஜயவர்தனவின் காலத்தில் இருந்து பின் பற்றப்பட்டு வருகின்ற ஒரு மரபு என்றும் கூறலாம். இந்தியாவுக்கு அருகே அமைந்திருக்கின்ற இலங்கையிடம் இப்படி ஒரு உறுதிமொழியை பெற்றுக் கொள்வது புதுடெல்லியின் விருப்பத்துக்குரிய விடயங்களில் ஒன்றாகும்.

இந்த உறுதிமொழியை அவர்கள் திரும்பத் திரும்ப கேட்பார்கள். ஒவ்வொரு முறை கேட்கும் போதும், இந்தியாவுக்கு அது மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அநுரகுமார திசா நாயக்க செல்வாக்குமிக்க வேட்பாளராக மாறி வருகிறார் என அறிந்து கொண்டிருந்த நிலையில், இந்திய அரசாங்கத்தினால் அவர் புதுடெல்லிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அப்போது அவரிடம் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு விரோதமான எந்த செயலையும் முன்னெடுக்கக் கூடாது என்று இறுக்கமான தகவல், அநுரகுமார திசாநாயக்கவிடம் பரிமாறப்பட்டது. அந்தச் சந்திப்பின் போதும் கூட இந்தியாவின் பாதுகாப்பிற்கு இலங்கையினால் ஆபத்து ஏற்பட இடமளிக்க மாட்டோம் என அநுரகுமார திசாநாயக்க உறுதியளித்திருந்தார்.

இப்போது அவர் ஜனாதிபதியாகிவிட்ட நிலையில் அவரிடம் இருந்து உத்தியோகபூர்வமாக அந்த உறுதிமொழியை பெற்றுக் கொள்வதில், புதுடெல்லி உறுதியாக இருந்தது. அநுரகுமார திசாநாயக்க புது டெல்லியில் 'ஹைத ராபாத் ஹவுஸில்' நடந்த செய்தியாளர் சந்திப்பில் அதனை உறுதிப்படுத்தினார்.

இது இந்தியாவுக்கு திருப்தியை தருகின்ற ஒரு விடயமாக இருந்தாலும், நிரந்தரமான அல்லது நிலையான நம்பிக்கையை கொடுக்குமா என்பது சந்தேகத்துக்குரிய ஒன்று. 1987ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தத்திலேயே இதற்கான எழுத்துமூல உறுதிமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனாலும், கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த ஜனாதிபதிகள் ஒவ்வொருவரும், இத்தகைய உறுதி மொழியை இந்தியாவிடம் கொடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் வெளிப்படையாக இந்தியாவின் நலன்களுக்கு எதிராக செயல்படாது போனாலும், இந்தியாவின் நலன்களை சவாலுக்கு உட்படுத்துகின்ற பல விடயங்களுக்குத் துணை போயிருந்தார்கள்.

குறிப்பாக சீனாவை சார்ந்த விடயங்களில், முன்னைய ஆட்சியாளர்களின் தீர்மானங்கள், இந்தியாவுக்கு திருப்திப்படுத்தியது என சொல்ல முடியாது. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தான், சீனா வலுவாக காலுன்றத் தொடங்கியது.

நல்லாட்சி அரசின் காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை கையில் எடுத்துக் கொள்ளும் அளவுக்கு, அதன் பொருளாதாரத் தலையீடு விரிவடைந்தது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டு குத்தகைக்கு சீனா





பெற்றுக் கொண்டிருப்பது, இந்தியாவுக்கு ஒரு நீண்ட கால அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் இருந்து வருகிறது. அத்தகைய அச்சுறுத்தல்களை முன் கூட்டியே கணித்து, அதனை தவிர்ப்பதற்கான வாய்ப்புகள் இருந்த போதும், இந்தியா அதனை பயன்படுத்திக் கொண்டிருக்கவில்லை.

அதேவேளை, இலங்கையில் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு தலைவர்களும், இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய செயல்களை அனுமதிக்க மாட்டோம் என வாக்குறுதி பெற்றுக் கொள்வதை இந்தியா வழமையாக்கி இருக்கிறது.

அந்த வழமையை அநுரகுமார திசாநாயக்க மாற்றவில்லை. ஆனால், இந்த வாக்குறுதி மட்டும் இந்தியாவிற்கு போதுமானதாக இருக்குமா என்பது சந்தேகம். இதனுடன் இந்தியா திருப்திப்பட்டுக் கொள்ளும் என்றும் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், சீனாவுடன் அநுரகுமார திசாநாயக்க கொண்டிருக்கின்ற உறவுகள், இந்தியாவை அப்படி ஒரு நிலைக்குள் வைத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

முன்னைய அரசாங்கங்களை விட, தற்போதைய அரசாங்கம் சீனா விடயத்தில் மென்போக்கை கடைபிடிக்கும் என்பது ஒரு அனுமானமாக இருக்கிறது. இன்னமும் அநுரகுமார திசநாயக்கவோ அல்லது அவரின் வேறு முக்கியமான அமைச்சர்களோ சீனாவுக்கு பயணம் மேற்கொள்ளவில்லை. சீனாவுடன் உயர்மட்ட பேச்சுக்களை நடத்தவும் இல்லை.

அவ்வாறான பேச்சுக்கள், சந்திப்புகள் நடக்கின்ற போது தான், சீனாவை இந்த அரசாங்கம் எவ்வாறு கையாளப் போகிறது என்பது தொடர்பான தெளிவான ஒரு வரைபடம் கிடைக்கும். அதற்கு முன்னர், இலங் கையிடமிருந்து இந்த உத்தரவாதத்தை பெற்றுவிட வேண்டும் என்பதில் புதுடெல்லி உறுதியாக இருந்தது.

இது அநுரகுமார திசாநாயக்க விடயத்தில் மாத்திரமன்றி, ஒவ்வொரு ஜனாதிபதிகள் பதவியேற்கின்ற போதும், இவ்வாறான சூழலையே இந்தியா எதிர்பார்க்கிறது. இவ்வாறான உத்தரவாதத்தை கொடுக்கின்ற இலங்கை தலைவர்கள், இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுகிறார்களா, இல்லையா என்ற கேள்வியும் இருக்கிறது.

அரசாங்கம் அப்படிப்பட்ட கேள்வி இல்லை என்றால், கடந்த காலங்களில் இந்தியாவுடன் இலங்கை முரண்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்காது. அண்மையில் சீனத் தூதுவர் கீ சென்ஹொங் இரண்டு விடயங்களில் இந்தியாவின் தலையீடு தொடர்பாக மறைமுகமான குற்றச் சாட்டுகளை சுமத்தியிருந்தார். பாக்கு நீரிணையில் உள்ள மூன்று தீவுகளில், கலப்பு மின் திட்டங்களை உருவாக்கும் ஒப்பந்தம் சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட பின்னர், பாதுகாப்பு காரணத்தைக் காட்டி ஒரு நாடு கொடுத்த அழுத்தங்களை அடுத்து, அந்த திட்டம் மீளப் பெறப்பட்டமை சீனாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது என்று அவர் குறிப்பிட்டிருந்தார். அது போல, சீனாவின் ஆய்வுக் கப்பல்கள், இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதை தடை செய்து அரசாங்கம் பிறப்பித்த உத்தரவும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் குழப்பத்தை ஏற்படுத்தியது என்று சீனத் தூதுவர் அண்மையில் கூறியிருந்தார்.

இந்தியாவின் அழுத்தங்களின் பேரிலேயே அது நிகழ்ந்தது என்றும், மாலைதீவு அரசாங்கம் சீன ஆய்வுக் கப்பலை அனுமதிக்கின்ற போது, இலங்கை அரசாங்கம் ஏன் அதனை அனுமதிக்கக் கூடாது என்றும் சீனத் தூதுவர் கேள்வி எழுப்பினார். இவ்வாறான செயற்பாடுகளால் இலங்கைக்கு சீனாவுக்கும் இடையில் அவ்வப் போது விரிசல்கள் ஏற்படுகின்றன என்பதை சீன தூதுவரின் அந்த கருத்து வெளிக்காட்டி இருந்தது.

அதேவேளை, இவ்வாறான விடயங்களில் இந்தியாவின் தலையீடுகள், அழுத்தங்கள் இலங்கைக்கு இருந்தன என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தியாவின் பாதுகாப்புக்கு இடையூறு அல்லது பாதிப்பை ஏற்படுத்த மாட்டோம் என வாக்குறுதி கொடுத்திருந்த இலங்கையின் தலைவர்கள், அந்த வாக்குறுதியை காப்பாற்றும் வகையில் செயல்பட்டிருந்தால் இவ்வாறான தலையீடுகள் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.


கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்




எனவே, இந்தியாவிடம் கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிகள் என்பது மெய்யானதா என்பது கேள்விக்குறி. இத்தகைய சூழல்கள் இருப்பதால் தான், ஒவ்வொரு முறை பதவிக்கு வரும் அரசாங்கத்திடம் இருந்தும் இந்தியாவின் நலன்களை பாதுகாக்கின்ற உத்தரவாதங்களை பெற்றுக் கொள்வதற்கு புதுடெல்லி விரும்புகிறது.

அதனையும் தாண்டி, நடக்கின்ற விவகாரங்களை அது தனது மேலாதிக்க பலத்தைக் கொண்டு சமாளித்துக் கொள்கிறது. கடந்த காலங்களைப் போலவே, எதிர்காலத்திலும் நிகழுமா இல்லையா என்பது எதிர்வு கூறக் கூடிய விடயம் அல்ல. ஆனால், அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம், இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறுகின்ற போது எதிர் கொள்ளக்கூடிய சிக்கல்களை புரிந்து வைத்திருக்கும். மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் சரி, கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கமும் சரி இந்தியாவுடன் இணங்கி செயல்படாத நிலையில் அவற்றின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதில் இந்தியா பங்கு வகித்ததாக ஊகங்கள் உள்ளன.

அப்படியான நிலையில், அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம், ஏற்கெனவே சீன சார்பு முத்திரையுடன் இருக்கின்ற சூழலில், இந்திய நலன்களுக்கு விரோதமாக செயல்படுகின்ற நிலை அவதானிக்கப்படுமேயானால், அதனை புதுடெல்லி சகித்துக் கொண்டிருக்கும் எனவும் எதிர்பார்க்க முடியாது.

இத்தகைய சூழலில், இலங்கையின் புதிய அரசாங்கம் இந்தியா தொடர்பாக, அதற்கு கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் தொடர்பாக கவனமாக நடந்துகொள்ள முற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வாறான ஒரு முன்னெச்சரிக்கை உணர்வு இந்த அரசாங்கத்துக்கு இருக்கும் மேயானால், அது இந்தியாவுக்கு கிடைத்துள்ள ஒரு முக்கிய வெற்றியாகவும் இருக்கும்.


எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!

உங்கள் அபிமான

ஈழநாடு பத்திரிகையின்

32வது ஆண்டு விழா

23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை

சங்கீத சங்கமம் 2025

விபரங்களுக்கு:- 416 841 9600

# மாற்றத்துக்கான காலம்

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததோடு கலங்கிப் போயிருக்கின்றன தமிழ்த் தேசியவாத சக்திகள். இனப் பிரச்சினைக்கு அது எத்தகைய தீர்வை முன் வைக்கப் போகிறது? மாகாணசபையின் எதிர்காலம் என்ன? என்பது தொடக்கம் வடக்குக் கிழக்கில் தமிழ்த்தேசிய அரசியலின் (பிராந்திய அரசியலின்) எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது? அடுத்து வரவுள்ள உள்ளூராட்சி சபை, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை எதிர்கொள்வது எப்படி? அதில் NPP யை முறியடிப்பதற்கான வியூகத்தை எவ்வாறு வகுக்கலாம்? என்பது வரையில் தலையைப் பிய்க்கும் அளவு நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ளன.

அரசியலில் இந்த மாதிரி நெருக்கடிகள் ஏற்படுவதொன்றும் புதிதல்ல. பொதுவாக இரண்டு வகையான நெருக்கடிகள் உருவாகுவதுண்டு. ஒன்று, புறச்சூழலின் விளைவாக, எதிர்த் தரப்புகள், பிராந்திய மற்றும் சர்வதேச அரசியற் சூழலினால் ஏற்படும் நெருக்கடி. மற்றது, அகச்சூழலினால் (தவறுகளினால்) ஏற்படுகின்ற நெருக்கடி. இப்போது உருவாகியிருக்கும் நெருக்கடி இரண்டினாலும் உருவாகியவை. அல்லது இரண்டும் கலந்தவை.

'ஜே.வி.பியையோ தேசிய மக்கள் சக்தியையோ பொருட்படுத்த வேண்டியதில்லை. தமது அரசியலுக்கு ஜே.வி.பியோ, என்.பி.பியோ சவாலாக என்றுமே இருக்கப் போவதில்லை' என்ற தவறான மதிப்பீட்டுடனேயே தமிழ்த் தேசியவாதிகள் இதுவரையும் இருந்தனர். அந்தத் தவறான மதிப்பீட்டுக்கு விழுந்திருக்கிறது பலமான அடி. அதைப் போல தாம் எப்படி நடந்தாலும் எதைச் செய்தாலும் அதையெல்லாம் ஏற்றுக் கொண்டு தமிழ் மக்கள் தமக்கே வாக்களிப்பார்கள். தம்மையே ஆதரிப்பார்கள் என்ற இறுமாப்புக்கும் விழுந்துள்ளது சவுக்கடி. ஆக இரட்டைத் தாக்குதலுக்குள்ளாகியிருக்கின்றன தமிழ்த் தேசியத் தரப்புகள்.

நடந்து முடிந்த தேர்தல்களில் தமிழ்த் தேசியவாதிகள் பின்தள்ளப்பட்டு, என்.பி.பி முன்னிலைக்குக் கொண்டு வரப்பட்டதன் மூலம் தமிழ்த் தேசிய அரசியலின் தவறான கணிப்புகள் நொருக்கப்பட்டன. இதனால் தடுமாறிப் போயுள்ளன இந்தத் தரப்புகள்.

என்றாலும் இந்தத் தோல்வியிலிருந்தும் வீழ்ச்சியிலிருந்தும் கற்றுக் கொள்ள முற்படாமல், 'விழுந்தாலும் முகத்தில் பலமான அடியில்லை' என்ற மாதிரித் தொடர்ந்து கதை விட்டுக் கொண்டேயிருக்கின்றனர் தமிழ்த்தேசியவாதிகள்.

தமக்கு (தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு) ஏற்பட்ட தோல்வியானது, தாம் பல அணிகளாகப் பிளவுபட்டு நின்ற காரணத்தினாலே ஏற்பட்டது. எதிர்காலத்தில் மீளவும் ஒற்றுமைப்பட்டு, ஒன்றாக ஒரே தரப்பாக நின்றால் மீண்டும் தம்மால் பெரு வெற்றியைப் பெற முடியும். தமிழ்த்தேசியவாதத்தை வலுப்படுத்த இயலும். தமிழ் மக்களைத் (தேசமாகத்) திரட்ட முடியும்' என்று அறியாமையில் புலம்பிக் கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையிற்தான் 'உடனடியாக ஒற்றுமை அணியைக் கட்ட வேண்டும்' என்று கோரஸ்பாடத் தொடங்கியுள்ளன.

இதற்கான முயற்சிகள் உடனடியாகவே ஆரம்பித்து விட்டதாக ரெலோ ஒரு தோற்றத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது. கடந்த வாரம் வவுனியாவில் கூடிய ரெலோவின் உயர்மட்டக் குழு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை மீள் நிலைப்படுத்த வேண்டும் என்று பேசியிருக்கிறது. அதற்கு முன் தமிழரசுக் கட்சியுடன் பேசி உடன்பாட்டுக்கு வருவதற்கு முயற்சிக்கிறது ரெலோ. ஆனால் இதற்கு தமிழரசுக் கட்சி வட்டாரத்திலிருந்து எந்தக் குரலும் எழவேயில்லை. இன்னொரு தரப்பாகிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி) தலைவர் கஜேந்திரகுமார் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசியிருக்கிறார். புதிய அரசாங்கத்துடன் தீர்வைக் குறித்துப்





பேசுவதற்கான தயாரிப்புத் தொடர்பாக இந்தச் சந்திப்பு நடந்ததாகச் சொல்லப்பட்டாலும் அதற்கும் அப்பால் உள்ளூராட்சிச் சபை, மாகாணசபைத் தேர்தல்களின்போது தேசிய மக்கள் சக்தி தொடர் வெற்றிகளைப் பெறாமல் தடுப்பதற்கான வியூகத்தைப் பற்றிப் பேசவே இந்தச் சந்திப்புகள் என்று தெரிகிறது. சிறிதரனைச் சந்தித்த கையோடு கஜேந்திரன்கள் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனைக் கிளிநொச்சியில் சந்தித்துள்ளனர். இங்கும் அதே விடயம் தான் பேசப்பட்டுள்ளது.

வெளியே தீர்வு யோசனைகளைப் பற்றியே பேசப்பட்டது எனக் கஜேந்திரன்கள் சொல்கிறார்கள். கஜேந்திரன்களின் கூற்றுப்படி பார்த்தால், தேசிய மக்கள் சக்தி இனப்பிரச்சினைக்கான தீர்வைப்பற்றி இன்னும் பேசவே தொடங்கவில்லை. அது அரசியலமைப்பு மாற்றம் பற்றியே பேசி வருகிறது. அரசியலமைப்பு மாற்றத்தை அடுத்தே அதிகாரப் பரவலாக்கம் அல்லது அரசியற் தீர்வைப் பற்றிய பேச்சுகள் நடக்கும் என எதிர்பார்க்கலாம்.

அதற்கு முன்பாக ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க அரசியல் ரீதியான பயணமாக இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார். டெல்லியில் இந்தியப் பிரதமர் மற்றும் இந்த அரசின் உயர்மட்டத்துடனான சந்திப்பில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் மாகாணசபைத் தேர்தல் பற்றி எந்த வகையில் பேசப்படப் போகிறது என்பது முக்கியமானது.

அதையும் சேர்த்தே இனப்பிரச்சினைக்கான தீர்வைப்பற்றிய எதிர்கால அணுகுமுறைகளும் நடவடிக்கைகளும் அமையும். அது கூட தேசிய மக்கள் சக்தி வைக்கப்போகின்ற தீர்வு யோசனைகள் அல்லது அரசியலமைப்பை பொறுத்தே எதையும் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும். அதற்கு முன் இது தான் நாங்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு. இது தான் நமக்குக் கிடைக்க வேண்டும் என்று வவுனியாவுக்கு இப்பால் பேசுவதால் பயனில்லை.

யதார்த்த நிலை இப்படியிருக்க, தமிழ் மக்களுக்கு தீர்வைக் குறித்துத் தாம் படு சீரியஸாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்றொரு தோற்றத்தைக் காட்ட முற்படுகிறார்கள் கஜேந்திரன்ஸ்.

தேர்தலுக்கு முன்பு கஜேந்திரன்கள் எந்தளவு ரெம்பறேச்சரில் முறுக்கிக் கொண்டிருந்தார்கள் என்று அவர்களை அவதானித்துக் கொண்டிருப்போருக்குத் தெரியும். ஒரு நாடு இரு தேசம் என்பதும் அதை ஏற்றுக் கொள்ளாத எந்தச் சக்தியோடும் தங்களுக்கு வாழ்நாளில் அரசியல் உறவே இல்லை என்ற மாதிரியும் அவர்களெல்லாம் தமிழினத் துரோகிகள் எனவும் சுருள் விட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதெல்லாம் நடந்து முடிந்த தேர்தலோடு வடிந்து போய் விட்டது. அரும்பொட்டில் கிடைத்த வெற்றி — ஒரு உறுப்பினராவது கிடைத்ததே என்ற நிலை கஜேந்திரன்களின் ஞானக் கண்ணைத் திறந்து விட்டுள்ளது. உண்மையில் அவர்களுடைய இயலாமையே இதுவாகும். இது தேர்தலில் வெற்றியடைந்த அணிகளின் சந்திப்பு என்றால், தேர்தலில் தோல்விடைந்து படுக்கையில் கிடக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். புளொட், ஸ்ரீகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சி, விக்னேஸ்வரனின் தமிழ்த்தேசிய மக்கள் கூட்டணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்றவை அடுத்த கட்டம் என்ன என்றே தீர்மானிக்க முடியாமல் உள்ளன.

இந்த நிலைமை நீடித்தால் உள்ளூராட்சி சபைகளில் தமக்கு ஒன்றிரண்டு இடங்களைப் பிடிப்பதே கடினமாக இருக்கும் என்று அவற்றுக்குப் புரிந்துள்ளது. மாகாணசபையில் சொல்லவே வேண்டாம். தேர்தலில் நிற்காமலே மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது தான்.



ஆனாலும் அரசியல் அபிலாசை விடாதல்லவா? அதனால் எப்படியாவது ஒரு கூட்டணியை அமைத்து விடுவோம் என்றே அவை சிந்திக்கின்றன. அதற்கு உடைந்து போயிருக்கும் இடுப்பு எலும்பைச் சரிப்படுத்த வேண்டும். அதாவது ஒரு பலமான தரப்போடு தான் கூட்டமைப்பை உருவாக்க முடியும். அப்படியென்றால் அது இப்போதைக்குத் தமிழரசுக் கட்சி தான்.

ஆனால் தமிழரசுக் கட்சியோ இந்தத் தரப்புகளைக் கண்டு கொள்ளாமல் விட்டுப் பிடிக்கிறது. ஆகவே அதை இப்போதைக்கு வழிக்கு உடனடியாகக் கொண்டு வர முடியாது. அப்படி வந்தாலும் தமிழரசுக் கட்சியே செல்வாக்கை ஆதிக்கத்தைச் செலுத்தும். இனிமேல் சம பங்கெல்லாம் கிடைக்காது.

தவிர, தமிழரசுக் கட்சிக்குள்ளும் ஏகப்பட்ட உள் வீட்டுப் பிரச்சினைகள் உண்டு. ஏற்கனவே கட்சி நீதிமன்ற வழக்கில் சிக்கியுள்ளது. அதை விட தலைமைப் போட்டியும் பிடுங்குப்பாடுகளும் தொடர்கின்றன. மாவை சேனாதிராஜா இப்போதும் தலைவரா இல்லையா? அடுத்த தலைவர் யார் என்ற கேள்வியோடு தமிழரசுக்கட்சியே திணறிக் கொண்டிருக்கிறது. மாவை சேனாதிராஜா விலகி, அந்த இடத்தில் சிறிதரன் வந்தால் நிலைமை மேலும் மோசமடையும். அவர் ஏனைய கட்சிகளைத் தன்னுடைய காலடியில் தான் வைத்திருக்க முயற்சிப்பார். ஏற்கனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இருந்த காலத்தில், தமிழரசுக்கட்சிக்கு சம நிலையாக ரெலோவும் புளொட்டும் ஈபிஆர்எல்எவ்வும் இருந்தபோதே கிளிநொச்சியிலும் தீவுப் பகுதியிலும் இந்தக் கட்சிகளின் செயற்பாட்டுக்கும் செல்வாக்குக்கும் இடமளிக்காமல் தடுத்தவர் சிறிதரன். என்பதால் உடனடியாகத் தமிழரசுக் கட்சியோடு ஏனைய கட்சிகள் கூட்டு வைத்துக் கொள்ள முடியாது. மட்டுமல்ல, தேர்தலில் வெற்றியடைந்த தரப்புகள் மட்டும் அரசியல் பேச்சுகளுக்காக ஓரணியில் நிற்குமே தவிர, தோல்வியடைந்த தரப்புகளையும் இணைத்துக் கொண்டு செல்ல முடியாது என்று இந்த அணிக்குள்ளிருந்து கலகக் குரல்கள் வேறாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி தான் உள்ளூராட்சித் தேர்தலுக்காக வெளியேறியது. தாம் ஒரு போதுமே வெளியேறவில்லை. ஆகவே மெய்யான தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தாமே என்று பிடிவாதமாகச் சொல்லிக் கொண்டிருந்தவை, ரெலோவும் ஈபிஆர்எல்எவ்வும். இருந்தும் அவை ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (DTNA) என்றே உத்தியோக பூர்வமாகத் தம்மைக் குறிப்பிட வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படியெல்லாம் கசப்பான பிராந்தியமொன்றிருக்கும் போது அதை எளிதாகக் கடந்து வருமா தமிழரசுக் கட்சி என்பது கேள்வியே!

அப்படித் தான் தமிழரசுக் கட்சி இணங்கி வந்தாலும் அது தோற்றுப் போன தரப்புகளுடன் எந்தளவுக்கு இணங்கி ஒட்டும் என்பது இன்னொரு கேள்வியாகும்.

இப்படி நெருக்கடிகள் நிறைந்த யதார்த்தப் பரப்பிருக்கும் போது அதைப் பொருட்படுத்தாமல் ஒற்றுமையைப் பற்றிக் கனவு காண்கிறார்கள் சிலர். இதை விட தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்க வேண்டுமானால், தனியே ஆயிரம் அணிகளின் சங்கமம் என்று சொல்லிக் கொண்டிருக்காமல் எந்த அடிப்படையில், எதற்காக, எந்த இலக்கை எட்டுவதற்காக எப்படியான அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்ற தெளிவு இவற்றுக்கு ஏற்பட வேண்டும்.

ஏறக்குறைய ஜே.வி.பி தன்னைப் பரிசோதனை செய்து என்.பி.பியாக எப்படி உருவாகியதோ அப்படியாவது இருக்க வேண்டும். தோல்விகள் ஏற்படுவது வழமை. அதைச் சரியான முறையில் (22ம் பக்கம் பார்க்க)

**Friends MATRIMONY**

www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2

# CHRISTMAS SALE

## UPTO 50% OFF

உங்கள் வாழ்க்கைக்கு பொருத்தமான
வாழ்க்கைத் துணையை இன்றே தேடிக்கொள்ள
Friends Matrimony இல் பதிவு செய்யுங்கள்...

## மணமகள்

**ID08120764 (F)** — 31yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager HR , Sri Lanka

**ID08120762 (F)** — 43yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120760 (F)** — 29yrs, 5'3" , Single , Visaakam , 6 Sevai , Bachelors.. , Admin Data.. , Canada

**ID08120054 (F)** — 34yrs, 5'5" , Divorced , Rohini , 4 Sevai , Diploma , Farmacy Technician , Canada

**ID08120320 (F)** — 29yrs, 5'4" , Single , Kettai , 4 Sevai , Bachelors.. , Finance Professional , Canada

**ID08120732 (F)** — 30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120006 (F)** — 24yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United States

**ID08121004 (F)** — 32yrs, 5'2" , Single , Mrigasheersham , 6 Sevai , Diploma , No work , Sri Lanka

**ID08121002 (F)** — 32yrs, 5'3" , Single , Aswini , 12 Sevai , Bachelors.. , Process Associate , Sri Lanka

**ID08120991 (F)** — 37yrs, 5'2" , Single , Thiruvaathirai , 3 Sevai , Diploma , Banker , Canada

**ID08120453 (F)** — 31yrs, 5'4" , Single , Poorattathi , 11 Sevai , Masters Degree , Senior Manager , Canada

**ID08120973 (F)** — 28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , United Kingdom

**ID08120391 (F)** — 28yrs, 5'2" , Single , Thiruvonam , 3 Sevai , Bachelors.. , Service Support.. , Canada

**ID08120939 (F)** — 25yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , Canada

**ID08120928 (F)** — 26yrs, 5'3" , Single , Visaakam , 8 Sevai , Bachelors.. , Tba , Sri Lanka

**ID08120927 (F)** — 34yrs, 5'3" , Single , Kettai , 9 Sevai , Bachelors.. , Product Manager , Canada

**ID08120921 (F)** — 27yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120889 (F)** — 30yrs, 5'2" , Single , Pooraadam , 7 Sevai , Bachelors.. , Dr Co-ordinator , Canada

## மணமகன்

**ID08120767 (M)** — 33yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Diploma , CUSTOMER Service.. , Sri Lanka

**ID08120766 (M)** — 34yrs, 5'4" , Single , Pooraadam ,N/A Sevai , Diploma , Work , Canada

**ID08120765 (M)** — 51yrs, 5'6" , Divorced , Aayilyam , N/A Sevai , Postgraduate.. , Book keeping.. , Canada

**ID08120767 (M)** — 33yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Diploma , CUSTOMER Service.. , Sri Lanka

**ID08120766 (M)** — 34yrs, 5'4" , Single , Pooraadam ,N/A Sevai , Diploma , Work , Canada

**ID08120765 (M)** — 51yrs, 5'6" , Divorced , Aayilyam , N/A Sevai , Postgraduate.. , Book keeping.. , Canada

**ID08121010 (M)** — 34yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , High School , Renovation , Canada

**ID08120997 (M)** — 46yrs, 5'6" , Single , Kettai , N/A Sevai , Diploma , Sales manger , Sri Lanka

**ID08120995 (M)** — 28yrs, 5'11" , Single , Chithirai , N/A Sevai , Bachelors.. , Accounting , Canada

**ID08120964 (M)** — 42yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , High School , Technical.. , Sri Lanka

**ID08120993 (M)** — 39yrs, 5'11" , Single , Poosam , 2 Sevai , High School , Truck Mechanic , Canada

**ID08120986 (M)** — 39yrs, 5'11" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Diploma , Analyst Business.. , Canada

**ID08120976 (M)** — 31yrs, 5'11" , Single , Bharani , N/A Sevai , Diploma , Business , Sri Lanka

**ID08120969 (M)** — 30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , BSC Civil.. , Sri Lanka

**ID08120974 (M)** — 30yrs, 5'5" , Single , Poorattathi , 12 Sevai , Postgraduate.. , Instructor , Sri Lanka

**ID08120969 (M)** — 30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , BSC Civil.. , Sri Lanka

**ID08120957 (M)** — 31yrs, 5'6" , Single , Chithirai , 1 Sevai , Postgraduate.. , Retail Manager , Canada

**ID08120938 (M)** — 46yrs, 5'4" , Single , Aswini , 6 Sevai , Bachelors.. , IT System.. , India

# தோற்ற பின்பும் படிப்பினைகள் போதாதா?




தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூடியது. வழமை போல குழப்பம். தேர்தல் முடிவுகளில் இருந்து அந்த கட்சி கற்றுக் கொள்ளவில்லை என்பதனை அந்த செயற்குழு கூட்டம் நிரூபித்தது. இது ஒரு புறமிருக்க, அந்தக் கூட்டத்தின் முடிவில் கூட்டத்தில் நடந்தவைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுமந்திரன் கூறிய ஒரு விடயத்தை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

கடந்த காலத்தில் அரசியலமைப்பு உருவாக்கம் சம்பந்தமான விடயங்களில் தமிழரசு கட்சி தீர்க்கமான நிலைப்பாடுகளை எடுத்திருக்கின்றது. சில வரைவுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. சில வரைவுகளோடு நாங்கள் இணங்கி இருக்கின்றோம். ஆகவே அது எங்களுடைய நிலைப்பாடு....

அதனைத் தொடர்ந்து கோத்தபாய ராஜபக்சவினுடைய காலத்தில் அவர் நியமித்த குழுவுக்கு முன்பாகவும் நாங்கள் சென்று எங்களுடைய நிலைப்பாட்டை எழுத்து மூலமாக கொடுத்திருக்கிறோம். ஆகவே அது எங்கள் கட்சியினுடைய நிலைப்பாடு. ஆகவே அவ்வாறான நிலைப்பாட்டோடு ஒத்து வருகின்றவர்கள் இருந்தால் எந்த ஆட்சேபனையும் கிடையாது.....

ஆனால் வேறு சிலர் எங்களுடைய கட்சிக்கு போட்டியாக வேண்டுமென்றே வெவ்வேறு வரைவுகளை செய்து சில குழப்பங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவ்வாறான குழப்பங்களை அந்த காலப்பகுதியில் செய்தவர்களோடு, அவர்களுடைய வரைவுக்கு இணங்கி செல்ல வேண்டிய அவசியம் நமக்கு கிடையாது....

தமிழரசு கட்சி தமிழர்களுடைய பிரதான கட்சி. வடக்கு கிழக்கில் சகல மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகளை தெரிவு செய்திருக்கின்ற ஒரே ஒரு கட்சி இலங்கை தமிழரசு கட்சி. ஆகவே மக்கள் கொடுத்த அந்த ஆணையை மீறி செயல்பட மாட்டோம். மற்றவர்கள் எங்களோடு எங்களுடைய நிலைப்பாட்டோடு இணைந்து செயல்படுவதற்கு வருவார்களாக இருந்தால் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை இவ்வாறு சுமந்திரன் தெரிவித்தார்.

அதாவது சுமந்திரன் அரசாங்கம் ஒரு புதிய யாப்பை உருவாக்க முயற்சித்தால் அது தொடர்பான தமிழரசு கட்சியின் நிலைப்பாட்டை அங்கே கூற முற்படுகிறார். அதன்படி தானும் பங்காளியாக இருந்து உருவாக்கிய எக்கிய ராஜ்ஜிய என்ற தீர்வுப் பொதியை அவர் கைவிடும் நிலையில் இல்லை. இது முதலாவது விடயம்.

இரண்டாவது விடயம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் முன் வைக்கப்பட்டிருக்கும் யோசனையாகிய தமிழ் மக்கள் பேரவையின் முன் மொழிவின் அடிப்படையில் புதிய யாப்புருவாக்க முயற்சியை எதிர்கொள்ளும் விடயத்தைப் பற்றியது என்று எடுத்துக் கொள்ளலாம்..

2015இல் இருந்து 18 வரையிலும் ரணில் மைத்திரி அரசாங்கத்தின் காலத்தில் ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிகளில் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளியாக செயற்பட்டது. அந்த யாப்பு உருவாக்க முயற்சிகளில் சுமந்திரன் தமிழ் தரப்பில் ஒரு தீர்மானிக்கும் சக்தி போல செயல்பட்டார். எக்கிய ராஜ்ஜிய என்று அழைக்கப்பட்ட அந்தத் தீர்வுப் 2018 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேனாவின் யாப்புச் சதி முயற்சியோடு குழம்பி நின்றது. அந்த எக்கிய ராஜ்ய தீர்வு முயற்சிக்காக சேர்ந்து உழைத்தவர்களில் அனுரகுமாரவும் ஒருவர் என்று சுமந்திரன் கூறுவது உண்டு.

இப்பொழுது ஒரு புதிய யாப்பை உருவாக்கத் தேவையான மூன்றில் இரண்டுபெரும்பான்மையைக் கொண்டிருக்கும் அனுர அரசாங்கம் முன்பு தாங்களும் சேர்ந்து உருவாக்கிய எக்கிய ராஜ்யவை விட்ட இடத்தில் இருந்து தொடருமாக இருந்தால் அதைத் தமிழ்த் தரப்பு எப்படி எதிர்கொள்வது?

சுதந்திரனும் சம்பந்தரும் எக்கிய ராஜ்யவை ஒரு சமஸ்டித் தீர்வு என்று தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அது லேபல் இல்லாத சமஸ்ரி என்றும் சொன்னார்கள். ஆனால் கஜேந்திரக்குமார் அது ஒற்றை ஆட்சிக்கு உட்பட்டது என்று திரும்பத் திரும்பச் சொன்னார். இப்பொழுதும் சொல்கிறார்.

அனுர அரசாங்கம் எக்கிய ராஜ்யவை மீண்டும் கையில் எடுத்தால் அதை எதிர்க்க வேண்டும் என்று கஜேந்திர குமார் கூறுகிறார். எக்கிய ராஜ்ய தீர்வை நோக்கி உழைத்த காலகட்டங்களில் அனுரவின் கட்சியாகிய ஜேவிபி யாப்புருவாக்கக் குழுவுக்கு வழங்கிய பரிந்துரைகளில் மூன்று விடயங்கள் முக்கியமானவை என்று கஜேந்திர குமார் சுட்டிக் காட்டுகிறார். முதலாவதாக, ஆளுநரின் அதிகாரம். இப்பொழுது இருப்பதைப் போலவே ஆளுநருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அதாவது ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் ஓர் ஆளுநருக்கு இருக்கக்கூடிய அதி உயர் அதிகாரங்கள் தொடர்ந்து இருக்க வேண்டும். இரண்டாவது, வடக்கையும் கிழக்கையும் இணைக்கக்கூடாது. மூன்றாவது, போலீஸ் அதிகாரங்களை வழங்கக் கூடாது. இந்த மூன்று பரிந்துரைகளையும் ஜேவிபி யாப்புருவாக்கக் குழுவின் முன் பரிந்துரைகளாக முன் வைத்ததாக கஜேந்திரகுமார் சுட்டிக் காட்டுகிறார்.

அவ்வாறு அனுர அரசாங்கம் எக்கிய ராஜ்ஜிய என்ற தீர்வுப் பொதியை மீண்டும் தூசு தட்டி எடுக்குமாக இருந்தால், அதை எதிர்ப்பதற்கு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று கஜேந்திரகுமார் அழைப்பு விடுத்திருந்தார். அவருடைய அழைப்பின் அடிப்படையில் சிறீதரனையும் செல்வம் அடைக்கல நாதனையும் அவர்களுடைய இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று அவர் சந்தித்தார்.இந்த மூன்று தரப்புக்களும் தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த தீர்வு முன் மொழிவின் அடிப்படையில் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிறார்.

தமிழ் மக்கள் பேரவையின் முன் மொழிவு எனப்படுவது சமஸ்டியைத் தீர்வாக முன் வைக்கின்றது. எனவே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் ஒரு சமஸ்ரித் தீர்வை முன்வைத்து பேச்சுவார்த்தை மேசையில் அமர வேண்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்பார்க்கின்றது.

கஜனின் அழைப்புக்கு சிறீதரனும் செல்வமும் இணங்குவார்களாக இருந்தால் அது ஒரு புதிய யாப்புருவாக முயற்சியை எதிர் கொள்ளும் நோக்கிலான தமிழ் ஐக்கிய முயற்சியாக அமையக் கூடும்.

இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குள் தொடர்ந்து புகைந்து கொண்டிருக்கும் உட்கட்சி மோதல்களுக்கும் ஒரு பங்கிருக்கும். சிறீதரன் என்ன முடிவு எடுக்கப் போகிறார் என்பதனை அது தீர்மானிக்கக் கூடும்.

அதேசமயம் சுமந்திரன் அணி இந்த விடயத்தில் என்ன முடிவெடுக்கும் என்பதனை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.ஏனென்றால், கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடந்த மத்திய செயற்குழு கூட்டத்தின் பின் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களின்படி அந்த ஐக்கிய முயற்சிக்குள் தமிழரசுக் கட்சி இணைவதை கட்சியின் மத்திய குழு அனுமதிக்குமா என்ற கேள்வி பலமாக எழுகின்றது.

கட்சியின் மத்திய குழுவில் இப்பொழுதும் சுமந்திரனின் ஆதிக்கம் அதிகம். அதேசமயம் புதிதாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களில் சாணக்கியன் சத்தியலிங்கம் ஆகிய இருவரும் சுமந்திரனின் செல்வாக்கு உட்பட்டவர்கள் என்று கருதப்படுகின்றது.

ரவிகரன் முன்பு சுமந்திரனுக்கு நெருக்கமானவராக பார்க்கப்பட்டவர். ஆனால் இப்பொழுது அவர் அவ்வாறில்லை என்றும் கருதப்படுகின்றது. மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிறீநேசன் சுமந்திரனின் செல்வாக்குக்குள் வரக்கூடியவர் அல்ல. புதிதாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிறீநாத் பெரும்பாலும் சுமந்திரனின் பக்கம் போக மாட்டார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அம்பாறையில் கோடீஸ்வரனும் சுமந்திரனின் பக்கம் போக மாட்டார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருகோணமலையில் குகதாசன் இரண்டு அணிகளுக்கும் இடையே தெளிவான நிலைப்பாட்டை எடுக்க மாட்டார். என்று நம்பப்படுகிறது. இந்த விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் அழுத்தம் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது இருக்கும். அதுவும் இந்த அணிச்சேர்க்கைகளைத் தீர்மானிக்கும்.

எனவே புதிய அரசாங்கம் ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கினால், அதை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் ஐக்கியமாக எதிர்கொள்ளுமா இல்லையா என்பது பெருமளவுக்கு தமிழரசு கட்சியின் முடிவில் தான் தங்கியிருக்கிறது என்று தெரிகிறது. தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் ஒருமித்து முடிவெடுக்குமா? அல்லது ஜனாதிபதி தேர்தலை எதிர்கொண்டது போல இரண்டு அணிகளாக பிளவுண்டு நிற்குமா? இந்த விடயத்தில் சிறீதரன் மத்திய குழுவை மீறி, சுமந்திரனின் செல்வாக்கை மீறி முன்கை எடுப்பாரா?

தமிழரசுக் கட்சி ஒருமித்து முடிவெடுக்க முடியாமல் குழுக்களாகப் பிரிந்து நிற்பதும் நீதிமன்றத்தில் நிற்பதும் அந்தக் கட்சியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ் அரசியலையும் பாதித்து வருகிறது.நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைத்ததை வைத்துக் கொண்டு, இறுமாப்போடு ஐக்கிய முயற்சிகளை அணுகுவார்களாக இருந்தால் அவர்கள் இறுதியிலும் இறுதியாக தாங்களும் தோற்று தமிழ் மக்களையும் தோற்கடிக்கப் போகிறார்கள் என்று பொருள்.

இம்மாதம் 18 ஆம் திகதியோடு தமிழரசு கட்சிக்கு 75 வயதாகிறது. 75 வயது என்பது ஒரு முதியவரின் வயது. ஆனால் தமிழரசுக் கட்சி ஒரு முதியவரை போலவா முடிவெடுக்கின்றது? நடப்பு நிலைமைகளைப் பார்த்தால் அது ஒரு அறளை பெயர்ந்த முதியவரைப் போல முடிவெடுப்பதாக அல்லவா தெரிகிறது?



# சிரியாவின் சீரழிவு:- தடி எடுத்தவன் எல்லாம் சண்டியன்

- அழகு குணசீலன் -

அரசியல் இராணுவ பலவீனங்களை பயன்படுத்தி இராஜதந்திரம், இராணுவ மூல உபாயங்கள் ஊடாக எதிரியை வீழ்த்துவது என்பது ஒன்றும் புதிய விடயமல்ல. இது சர்வதேச, பிராந்திய பூகோள அரசியல் நலனை அடிப்படையாகக் கொண்டது. இன்றைய உலகில் இவற்றிற்கு அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியா என்பன வழங்குகின்ற பின்புற காற்று வளம் இந்த இராணுவ, அரசியல் இலக்கு எல்லைகளையும் தாண்டி பொருளாதார இலக்குகளை அடைவதை இலகுபடுத்துகிறது. காலனித்துவ மேலாதிக்கம் ஈன்ற நவகாலனித்துவம் என்ற மறுபிறப்பும் மறுவடிவமும் இது.

இதை சம்பந்தப்பட்டவர்கள் சமானத்திற்கான போர், பயங்கரவாதத்திற்கு எதிரான போர், ஆக்கிரமிப்பு, ஜனநாயக மறுப்பு, அடக்குமுறை, சர்வதிகாரத்திற்கு எதிரான போர் என்று எப்படியும் கதை விடலாம். ஆனால் ஒரு போர் அதற்கு கூறப்படும் காரணங்களையே மீள் பிரசவம் செய்வதாக அமைந்து விடுகிறது. இவற்றை செய்பவர்களே மீட்பர்களாகவும், மீட்பர்களே செய்பவர்களாகவும் இருக்கின்றனர். இவற்றை ஜனநாயகம், மனித உரிமைகள், கருத்து சுதந்திரம் என்ற வார்த்தைகளின் மூலம் சர்வதேச அரசியல் சந்தையில் இந்த வியாபாரிகள் மிகவும் இலகுவாக விற்பனை செய்தும் விடுகிறார்கள்.

சமகாலத்தில் இடம் பெறுகின்ற மூன்று சண்டைகள் ஒன்றில் இருந்து ஒன்றை தனியாக பிரித்து பார்க்க முடியாத ஒரு கோர்வை. உக்ரைனில் ஆரம்பித்து, பாலஸ்தீனத்தில் மீள் உச்சம் பெற்று, சிரியாவில் வந்து நிற்கிறது. இந்த மூன்று சண்டைகளும் இரு வல்லரசுகளுக்கு இடையிலான மோதல் என்பது சொல்லித்



தெரியவேண்டிய ஒன்றல்ல..

இதற்கு அனுசரணையாக அவர்களின் அணிகளும் பங்காளர்களாக உள்ளனர். பங்காளர்கள் வல்லரசுகளுக்கு பின்னால் குருட்டுத்தனமாக தொடர்கின்றனர்.

அமெரிக்க ஆதிக்க சக்தியின் பின்னால் இஸ்ரேல், மேற்கு ஐரோப்பிய நாடு கள் முக்கிய அன்றைய காலனித்துவ நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, போர்த்துகல், ஸ்பெயின், ஒல்லாந்து என்பனவும் ஜேர்மனியும் அணி வகுத்துள்ளன. உக்ரைன் யுத்தம் பூகோள பிராந்திய அரசியல் அச்சம் காரணமாக மேலும் பல கிழக்கு, வட ஐரோப்பிய நாடுகள் தமது நடுநிலையில் இருந்து விலகி பக்கம் சார காரணமாக அமைந்துள்ளது. நேட்டோ அணியாக துருக்கியும் தம் பங்கை செலுத்தத் தவறவில்லை.

இவை ரஷ்ய உக்ரைன் யுத்தத்தில் ஆயுத,நிதி, இராணுவ வளங்களின் வழங்குனர்களாக, உக்ரைன் ஆதரவு நிலைப்பாட்டை கொண்டுள்ளன. இந்த நிலைப்பாட்டை உக்ரைன் ஜனாதிபதி நன்கு பயன்படுத்துகிறார். எந்த சந்திப்பிலும் அவரின் கோரிக்கை அதிக ஆயுதமாகவே இருக்கிறது. போரை போரால் வெல்ல முடியும் என்ற



நிலைப்பாடு. மறு வல்லரசு தரப்பான ரஷ்யாவுடன் ஈரான், ஈராக், லெபனான், சிரியா என்பன ஓரணியில் இயங்குகின்றன. ஹாமாஸ் இயக்கம் இஸ்ரேலில் பொதுமக்கள் மீது மேற் கொண்ட தாக்குதலும், நூற்றுக்கணக்கானோர் கடத்தப்பட்ட சூழலும் இஸ்ரேல் — பாலஸ்தீன போரில் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்த கதையாக அமைந்தது. பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் அனைத்து அரச பயங்கரவாதத்தையும் அங்கீகரித்து, ஆதரவு வழங்கிய மேற்குலகம் வெறுமனே மனிதாபிமான உதவிகளை மட்டுமே வலியுறுத்தியது. அதையும் இஸ்ரேல் கண்டு கொள்ளவில்லை. அமெரிக்க இறக்கைகளுக்குள் இருக்கும் இஸ்ரேலுக்கு எதிராக ஐ.நா. மட்டுமன்றி எந்த சர்வதேச அமைப்பும் ஒரு துரும்பை கூட நகர்த்த முடியவில்லை. இதற்கு போர்க் குற்ற சர்வதேச நீதிமன்றமும் விலக்கல்ல. ஐ.நா.செயலாளர் நாயகம் பதவி விலக வேண்டும் என்ற அளவுக்கு இஸ்ரேலுக்கு அமெரிக்க ஆதரவு இருக்கிறது.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் களமும், முடிவுகளும் இந்த சூழலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவாறான ஒரு நிலையை எட்டின. அமெரிக்க வரலாற்றில் மிகவும் பலவீனமான ஜனாதிபதி ஜோ பைடன் வேட்பாளராகக் கூட போட்டியிட முடியாதவாறு ஜனநாயகக் கட்சியின் ஆதரவை இழந்தார். அவருக்கான பதிலீடாக றொனால்ட் ட்ரம்க்கு முன்னால் தேர்தல் களத்தில் தாக்குப் பிடிக்கக்கூடிய அரசியல் சக்தியை கமலா ஹரீஷ் கொண்டிருக்கவில்லை. விளைவு, ட்ரம்பின் அமெரிக்கா பெ(க)ஸ்ற் கோஷம் மீண்டும் ஒரு முறை வெற்றி பெற்றது.

நேட்டோ, ஐ.நா, என்பனவற்றிற்கு எதிராக நிதி வழங்கலை குறைத்தல், உள்நாட்டு பொருளாதார மேம்பாடு, இராணுவத்தை வெளிநாடுகளில் இருந்து மீளப்பெறல் குடியேற்றவாசிகளுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள், சமகால யுத்தங்களில் பைடனை விடவும் மாறுபட்ட அணுமுறை என்பனவற்றை ட்ரம் இடமிருந்து எதிர்பார்க்கும் உலகத்தில் பைடன் நிர்வாகம் வெள்ளை மாளிகையை வரும் ஜனவரி 20ம் திகதி காலி பண்ணுவதற்கு முன்னர் அவசர அவசரமாக எடுத்த முடிவுகளில் ஒன்றே சிரியா கிளர்ச்சி.

யாரை பயங்கரவாதிகள் என்று கூறினார்களோ அவர்களையே பயன்படுத்தி அசாத் நிர்வாகத்தை அகற்றி ரஷ்யாவை பலவீனப்படுத்தும் நடவடிக்கை இது. ஆப்கானிஸ்தானில் ரஷ்யாவுக்கு எதிராக ஒசாமா பில்லாடனை வெள்ளை மாளிகையில் வரவேற்றதிற்கும் இந்த தந்திரோபாயத்திற்கும் இடையே வேறுபாடில்லை. இதன் மூலம் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் ஒரு கல்லில் மூன்று மாங்காய்களை வீழ்த்தி இருக்கிறார்கள்.

1. உக்ரைன் யுத்தத்தில் ரஷ்யாவின் முழுக் கவனமும் திரும்பியிருந்த நிலையில் சிரியாவுக்கு இராணுவ உதவிகளை அதிகரிக்க முடியாத பலவீனத்தை பயன்படுத்தி அசாத் ஆட்சியை வீழ்த்தியமை.

2.அசாத் நிர்வாகம் சீர்குலைந்த நிலையில் சிரியாவின் கோலான் குன்று பிரதேசத்தில் தாக்குதல் நடாத்தி இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்பை விரிவாக்கம் செய்தல்.

3.குர்திஷ்தான் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக துருக்கி சிரிய எல்லையில் தாக்குதல் நடாத்தி துருக்கி தனது எல்லையை பலப்படுத்தல்.

ஈராக்கிற்கு எதிரான யுத்தத்திலும் அமெரிக்கா குர்திஸ்தான் தனியரசுக்கான வாக்குறுதியை வழங்கி அவர்களை பயன்படுத்திய பின்னர் நடு வழியில் கையை விரித்த கதையும் இங்கு நினைவு கூரத்தக்கது. ஏற்கனவே குர்திஷ் விடுதலை அமைப்பின் தலைவர் ஒஸ்லான் மொஸ்கோ செல்ல விருந்த வழியில் ஆபிரிக்காவில் வைத்து சி.ஐ.ஏ, மொசாட் புலனாய்வு அமைப்புக்களினால் கடத்தப்பட்ட விடயத்தையும் இச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்தலாம்.

இன்று சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ்ஸை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கும் கிளர்ச்சியாளர்கள் வேறுயாருமல்ல. அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான போர்ப் பிரகடனம் செய்த அல்கைதா, ஐ.எஸ் அமைப்புக்களின் உறுப்பினர்கள். 2011 அரபுலக கிளர்ச்சிகளின் போது இருந்து ரஷ்யாவின் படைகள் சிரியாவிற்கு பக்கபலமாக இருந்து வருகின்ற போதும் 2015இல் இருந்து இது வெளிப்படையானது. ரஷ்யா இரண்டு யுத்தங்களை ஏக காலத்தில் எதிர் கொள்ள முடியாத நிலையில் சிரியா கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ந்துள்ளது.

அசாத் ரஷ்யாவுக்கு தப்பியோட வேண்டியேற்பட்டது. லெபனானிலும், ஈரானிலும் ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் நடாத்தும் எல்லை தாண்டிய அரச பயங்கரவாதம், ஈரான் ஹிஸ்புல்லாவுக்கு வழங்கும் ஆதரவுக்கும், லெபனான் வழங்கும் ஆதரவுக்கும் எதிரானதாக அமைகிறது. ஹிஸ்புல்லா இஸ்ரேலின் பாலஸ்தீன ஆக்கிரமிப்புக்கு எதிராக பாலஸ்தீன அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதனால் ஹாமாஸை மட்டும் அல்ல ஹிஸ்புல்லாவையும் அழிக்கும் இலக்கில் இது இடம்பெறுகிறது.

அமெரிக்க ஆசியோடு தருணம் பார்த்து இடம் பெற்றுள்ள அசாத் அரசின் வீழ்ச்சியின் போது கிளர்ச்சியாளர்கள் வழமைக்கு மாறாக அதாவது தமது அல்கைதா, ஐ.எஸ். வளர்ப்பு பின்னணிக்கு மாறாக நடந்துள்ளனர் என்று மேற்குலக ஊடகங்கள் பாராட்டுகின்றன.

இன்றைய நிலையில் இதை மறுப்பதற்கில்லை. இதுவும் கிளர்ச்சியாளர்களுக்கான அமெரிக்க ஆதரவுக்கான நிபந்தனைகளுள் ஒன்றாகவே இருக்க முடியும். இது சிரிய மக்களுக்கு ஒரு பெரும் ஆறுதலையும், எதிர்காலம் குறித்த நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இல்லையேல் அமெரிக்காவுக்கான எதிர்ப்பலை அரபுலகில் அதிகரித்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் கிளர்சிப்படையினரின் இந்த இனம் புரியாத அமைதி குறித்து அரபுலகில் ஆயிரம் கேள்விகள், சந்தேகங்கள் இன்னும் இருக்கவே செய்கின்றன.

1971 முதலான அசாத் குடும்பத்தின் 53 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உக்ரைன் யுத்தம், பாலஸ்தீன யுத்தம் என்பன அமெரிக்காவுக்கும், அதன் கூட்டாளிகளுக்கும் வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

மறு பக்கத்தில் இரண்டு தேசிய இனங்களான பாலஸ்தீன, குர்தீஸ் மக்களின் போராட்டங்கள் முடிவற்று தொடர்கின்றன. பாலஸ்தீன, குர்திஸ்தான் கேள்விகளுக்கு பதில் இன்றி இந்த பிராந்தியத்தில் அமைதி என்பது வெறும் வெற்று வார்த்தை.

மேற்குலகம் பயங்கரவாதத்தையும், தேசிய விடுதலைப் போராட்டங்களையும் ஒன்றாக போட்டு குழப்பியடிக்காமல் காலத்திற்கு பொருத்தமான அணுகு முறையை கையாளாததவரை சமாதானத்திற்கான போர் என்பது அதற்கு எதிரான போரே.

# இந்தியா குறித்த கடும் போக்கை மாற்றிக் கொண்டுள்ளாரா அநுர?

## புதுடில்லிப் பேச்சுக்களின் பின்னணியில் எழும் கேள்விகள்!

– ஆர்.பாரதி –

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயகவின் இந்திய விஜயமும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் அவர் நடத்திய பேச்சுக்களும் ஊடகங்களில் அதிக அளவுக்கு முக்கியத்துவம் பெற்றமைக்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

முதலாவது, அவர் இந்திய எதிர்ப்பை தமது பிரதான கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருந்த கட்சி ஒன்றின் தலைவர் என்பது. அந்தக் கொள்கையுடன் தான் அவர்கள் நீண்டகாலம் பயணித்திருந்தார்கள். அதன் மூலமாகத் தான் கட்சியையும் வலுப்படுத்தினார்கள்.

இரண்டாவது அவரது ஜே.வி.பி. ஒரு சீன சார்பு அமைப்பாக அடையாளம் காணப்பட்டிருந்தது. தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலில் பெற்ற வெற்றி குறித்த கொழும்பிலுள்ள சீனத் தூதுவின் பிரதிபலிப்புக்களும் இந்தக் கருத்துக்கு வலுச் சேர்த்திருந்தது.

இலங்கையை மையப்படுத்திய சீன – இந்திய வல்லரசுப் போட்டி தீவிரம் அடைந்திருக்கும் பின்னணியில் மிகவும் நிதானமாக செயற்படும் இராஜதந்திரத்தை புதுடில்லி விஜயத்தின் போது ஜனாதிபதி திசநாயக்க வெளிப்படுத்தினார்.

தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்டவராகவே திசாநாயக்கவின் அணுகுமுறை காணப்பட்டது. அதாவது, கடந்த கால ஜே.வி.பி.யின் வரலாறு எவ்வாறிருந்தாலும், இந்தியா குறித்த கடும் போக்கை ஜனாதிபதி மாற்றிக் கொண்டிருக்கின்றார் என்பது இந்த விஜயத்தின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பிராந்திய ரீதியான பூகோள அரசியலை அனுசரித்துச் செல்ல வேண்டிய தேவை இருப்பதை உணர்ந்து கொண்டவராகவே ஜனாதிபதியின் தற்போதைய அணுகுமுறை உள்ளது.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் திசாநாயக்க மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டு பயணமாக இந்த இந்திய விஜயம் அமைந்திருந்த நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில் அது முக்கிய பங்கு வகித்தது. இந்த விஜயத்தின் போது பேசப்பட்ட விடயங்கள், இறுதியாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கை என்பனவற்றைப் பொறுத்தவரை, இலங்கை, இந்திய மற்றும் தமிழ் தரப்புக்கள் அதில் தமக்கு சாதகமான அம்சங்கள் என்ன உள்ளன என்பதிலேயே கவனத்தைச் செலுத்தியிருந்தார்கள்.

இந்த விஜயத்தின் போது பின்வரும் ஐந்து அம்சங்கள் முக்கியத்துவம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

முதலாவது, இலங்கையின் பொருளாதார ஸ்திரப்படுத்தல் முயற்சிகளுக்கு இந்தியா வழங்கிய உதவிக்கு ஜனாதிபதி திசநாயக்க நன்றி தெரிவித்தார். இரு நாடுகளும் வர்த்தகம், ஆற்றல், மற்றும் கட்டமைப்பு போன்ற துறைகளில் எதிர்காலத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தின.

இரண்டாவது, இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்கும் வகையில் இலங்கை நிலம் பயன்படுத்தப்படாது என்று ஜனாதிபதி திசாநாயக்க உறுதியளித்தார்.

மூன்றாவது, இலங்கை, பிரிக்ஸ் (BRICS) அமைப்பில் உறுப்பினராக சேர்வதற்கான விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டன. இந்தியா அதற்கு சாதகமாக பதிலளித்தது.



நான்காவது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை அரசு தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்று நம்புவதாக தெரிவித்தார். இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக அமல்படுத்துவதற்கான வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார் அதேபோல் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதும் மோடியின் கருத்தாக வெளிப்பட்டது.

ஐந்தாவதாக, இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவர் பிரச்சினைக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டது.

இலங்கையின் நிலப்பகுதி இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி திசநாயக்க வழங்கியுள்ள உறுதி மொழி புதுடில்லி எதிர்பார்க்கப்பட்ட முக்கியமான விடயம். இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலுடன் மூன்று மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போதும் திசநாயக்க இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார். ஜனாதிபதித் தேர்தலை எதிர் கொண்டிருந்த நிலையில் அதனைத் தெரிவித்திருந்த அவர் தற்போது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள பின்னணியில், இந்தியப் பிரதமரிடமே அதனைத் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறான வாக்குறுதி ஒன்றை இந்தியா எதிர்பார்த்தமைக்கு காரணம் இருந்தது. சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் அடிக்கடி இலங்கை கடற்பகுதிக்குள் வந்து செல்வதும், கடலாய்வுகள் என்ற பெயரில் சீனத் தரப்பினர் மேற்கொள்ளும் செயற்பாடுகளும் புதுடில்லிக்கு எப்போதும் நெருடலைக் கொடுத்துக் கொண்டிருந்தது. இந்தியாவின் கவலைகளையடுத்து வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களுக்கு ரணில் விக்கிரமசிங்க ஒரு வருட காலத்துக்கு தடை விதித்திருந்தார். அந்தத் தடை இம்மாதத்துடன் முடிவுக்கு வருகின்றது.

திசாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தத் தடையை தொடருமா என்ற கேள்வி எழுப்பப்பட்டிருக்கும் நிலையில் தான், பொதுவான முறையில், இலங்கையின் நிலப்பகுதி இந்தியாவுக்கு எதிராக பயன் படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியிருக்கிறார். இலங்கையின் முக்கிய துறைமுகங்களான கொழும்பு, அம்பாந்தோட்டை ஆகியவற்றில் சீனாவின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கின்றது. இதனால், சீனாவின் செல்வாக்கை முற்றிலுமாக ஒதுக்க முடியாது என்ற கருத்தும் உள்ளது. சீனாவின் கப்பல்கள் வந்து செல்லலாம். ஆனால், அவை இந்தியாவின் பாதுகாப்புக்கு எவ்வகையிலும் குந்தகமாக அமையாது என்றவாறான ஒரு நிலைப்பாட்டை திசநாயக்க அரசாங்கம் எடுக்கலாம்.

இலங்கை, கடல்சார் சட்டங்களை (UNCLOS) பின்பற்றும் நாடாக இருந்தால், சீன கப்பல்களுக்கு முழுமையான தடைகளை விதிக்க முடியாத நிலையும் உள்ளது.

அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்குக்கு மத்தியில், சிக்கலான புவிசார் அரசியல் பரப்பில் கயிற்றில் நடப்பது போல மிகவும் நிதானமாக காய்களை நகர்த்த வேண்டியவராக ஜனாதிபதி திசநாயக்க இருக்கின்றார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் உருவாகிய பொருளாதார நெருக்கடியின் சில விளைவுகளை இன்று காண முடியா விட்டாலும், நெருக்கடி தீர்க்கப்படவில்லை. குறுகிய கால நீண்ட கால திட்டங்களின் அடிப்படையில் இதற்கான உபாயங்கள் வகுக்கப்பட வேண்டும். இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இரு நாடுகளின் உதவிகளும் அவசியம் என்பதை உணர்ந்து கொண்டவராகத் தான் ஜனாதிபதி திசநாயக்க காய்களை நகர்த்துகின்றார்.

தனது முதலாவது வெளிநாட்டு பயணமாக புதுடில்லி சென்ற ஜனாதிபதி, அடுத்த மாதம் சீனாவுக்கு செல்லவிருக்கிறார்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பொருளாதார மீட்சிக்கு இந்த இரண்டு நாடுகளையும் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது தான் அவர்களுடைய பிரச்சினை. அந்த வகையில், ஜனாதிபதியின் புதுடில்லி விஜயம் வெற்றி அளித்திருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். பொருளாதார ரீதியாக பயனுள்ள பல உடன்படிக்கைகள் பல எட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மூன்று முக்கியமான விஷயங்கள் எதிர்பார்க்கப்பட்டது. ஒன்று – இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வு. இரண்டு – மாகாண சபைகளுக்கான தேர்தல்களை விரைவாக நடத்துவது. மூன்றாவது – மீனவர் பிரச்சினைக்கு தீர்வு.


புதுடில்லி பயணமாக முன்னர் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவை ஜனாதிபதி அவசரமாகச் சந்தித்தது. வெறுமனே சிவஞானம் சிறிதரன் கேட்டுக்கொண்டமையால் என்று மட்டும் சொல்லி விட முடியாது. சில செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை இந்தியப் பிரதமருடனான சந்திப்புக்கு முன்னதாகக் காட்டுவதற்கும் ஜனாதிபதி விரும்பியிருக்கலாம். தமிழரசுக் கட்சியினரிடம் சொன்ன விடயங்களை இந்தியப் பிரதமரிடமும் ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

அதன் அடிப்படையில் தான், தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறும்படி இலங்கை அரசியல் அமைப்பு முழுமையாக செயல்படுத்தப்படும் என்று தன்னுடைய எதிர்பார்ப்பை இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார். 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக குறிப்பிடாமல், அதனை அமுல்படுத்தலுக்கான ஆதரவான கருத்துகளை தான் பொதுவாக தெரிவித்தார். 13 ஆவது திருத்தம் மட்டுமன்றி 16 ஆவது திருத்தமும் இலங்கை இந்திய உடன்படிக்கையின் பின்னணியில் வந்ததுதான். அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பது அவற்றை உள்ளடக்கியது தான்.


இலங்கை அரசியல் சூழல் மற்றும் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடந்த போதும், மோடி 13ஆம் திருத்தச்சட்டத்தை குறிப்பிட்டு பேசுவதை தவிர்த்தமைக்கும் காரணம் இருக்கின்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை பாதிக்காமல் தீர்வு காணும் முயற்சியாகவே இது விளக்கப்படுகிறது. அதேவேளையில், 13க்கு எதிராக ஜனாதிபதி திசாநாயக்கவின் கட்சி குரல் கொடுத்ததும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்கள் நிரந்தரத் தீர்வாக ஏற்காமல் இருக்கலாம். ஆனால், தற்போதைய நிலையில், அதனையும் விட்டால், எதுவும் இல்லை என்பது தான் யதார்த்தம். இந்த டில்லியில் கூட்டறிக்கையில் சொல்லப்பட்ட விஷயங்கள் நடைமுறைப்படுத்தப்படுமா, என்பது தான் தமிழ் மக்கள் மத்தியில் எழும் கேள்வி!

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! தடைபட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.. உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்





ரிஷபராசி அன்பர்களே! வீண் மனகு ழப்பம் ஏற்பட்டு நீங்கும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வியாபாரத்தில் கூடுதல் லாபம் பெற முடியும். உத்யோகத்தில் கூடுதல் பணிச்சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தினருடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம்.





மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் குறித்த காலத்தில் வெற்றி பெறும். மனம் ஒருநிலைப்படும். கவுரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மந்தமானபோக்கு காணப்பட்டாலும் பணவரத்து குறைவு இருக்காது.தொழிலில் கூட்டாளிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.




கடகராசி அன்பர்களே! மனோதைரியம் அதிகரிக்கும். எல்லா காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். எல்லா இடங்களிலும் மரியாதையும், கவுரவமும் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். கடன் பிரச்சனை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும்.





சிங்கராசி அன்பர்களே! மனகுழப்பம் நீங்கும். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கவுரவம் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாக செய்து முடித்து பாராட்டு பெறுவர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். தர்மசிந்தனை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். பணியாளர்கள் உதவியும் கிடைக்கும்





துலாம்ராசி அன்பர்களே! சுபச்செலவுகள் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். துணிச்சல் உண்டாகும். எதை பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் சரக்குகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும்.





விருச்சிகராசி அன்பர்களே! மன நிம்மதி கிடைக்கும். புத்திசாதுர்யம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். புதிய ஆர்டர்கள் பெறவும், வாடிக்கையாளர்களை திருப்தி செய்யவும் அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.








தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாட்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்டு செயல்படுத்துவது வளர்ச்சிக்கு உதவும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதை பற்றியும் கவலைப்படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது. தன்மையாக பேசுவது நல்லது.




கும்பராசி அன்பர்களே! சுபச்செலவுகள் உண்டாகும். வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! எல்லாவிதமான முன்னேற்றமும் ஏற்படும். பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# மாற்றத்துக்கான காலம்

(17ம் பக்கத் தொடர்ச்சி) மதிப்பிட்டால் தான், ஆய்வுக் குட்படுத்தினால் தான் வெற்றியைப் பெற முடியும். சமாளிக்க முற்பட்டால் படுதோல்விதான் கிடைக்கும். நல்ல உதாரணம், ஐ.தே.க, சு.க போன்றவை யாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றில் வடக்குக் கிழக்கில் என்.பி.பி வெற்றியைப் பெற்றது என்றால், அதற்குக் காரணம், தமிழ்த்தேசியத் தரப்புகளின் அரசியல் வெறுமையும் அவற்றின் மீது ஏற்பட்ட நம்பிக்கையீனமுமேயாகும். தமிழ்த் தேசியத் தரப்புகள் புதிய சூழலைக் கருத்திற் கொண்டு தம் முடைய அரசியலை வடிவமைக்காமையே பிரதான காரணமாகும்.

குறிப்பாக போருக்குப் பிந்திய சூழலையும் புலிகளுக்குப் பிந்திய நிலைமையையும் இவை கணக்கிடத் தவறின. பதிலாக 1970களுக்குத் தமது அரசியலைப் பின்னோக்கி இழுத்துச் சென்றன. இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் எந்த முயற்சி எடுத்தாலும் அதனால் பயன் கிட்டப்போவதில்லை. இது அவர்களுடைய அரசியல் இயலாமையையும் அரசியல் வரட்சியையுமே காட்டுகிறது. வரலாற்றிலிருந்தும் மக்களுடைய மனங்களிலிருந்தும் எதையும் படித்துக் கொள்ள விரும்பாத தன்மையைத் தெளிவாகச் சொல்கிறது.

தமிழ்த்தேசியவாத அரசியற் கட்சிகள் மட்டுமல்ல, தமிழ் ஊடகங்கள், அரசியற் பத்தியார்களிற் பலரும் கூட அப்படித் தான் தவறாகக் கருதிக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. உண்மையான காரணத்தை ஆராய்ந்தறிந்து கொள்வதற்கு யாருமே தயாராக இல்லை.

மக்களின் மனமாற்றத்துக்கு உண்மையான காரணம், வெறுமையான தமிழ்த்தேசியவாத அரசியலின் மீது ஏற்பட்ட சலிப்பும் வெறுப்புமேயாகும். முக்கியமாக அதனுடைய உள்ளடக்கப் போதாமை, புதிய சவால்களைப் புரிந்து கொண்டு செயற்படக் கூடிய வளர்ச்சியின்மை, செயற்திறனின்மை, நம்பிக்கையின்மை போன்ற பல பாதகமான விடயங்கள் தமிழ்த்தேசியவாத அரசியற் கட்சிகளை மக்களிடமிருந்து தூரத் தள்ளியுள்ளன.

இவற்றை இனங்கண்டு, புரிந்து கொண்டு தம்மை மீள்நிலைப்படுத்தாமல் வெறுமனே ஒற்றுமைக் கோசம் போடுவதாலோ ஒற்றுமை என்ற நாடகத்தை ஆடுவதாலோ மாற்றமேதும் நிகழப் போவதுமில்லை. வெற்றி கிடைக்கப் போவதுமில்லை. வேண்டுமானால், ஒரு செயற்கையான கட்டமைப்பையோ கூட்டமைப்பையோ தற்காலிகமாக உருவாக்கி, அடுத்து வருகின்ற உள்ளூராட்சி, மாகாணசபை, பாராளுமன்றத் தேர்தல்களில் குறிப்பிட்டளவு தற்காலிக வெற்றியை இவர்கள் பெறலாம்.

அது தொடர்ந்தும் நீடிக்காது. மட்டுமல்ல, அந்த வெற்றி முன்னரைப்போல சில கட்சிகளின், அணிகளின், சில நபர்களின் வெற்றியாக அமையுமே தவிர, தமிழ் மக்களின் அரசியல் வெற்றியாக அமையாது.

வடக்குக் கிழக்கில் என்.பி.பி பெற்ற வெற்றிக்கான காரணங்கள் பலவாக இருக்கலாம். அவை சரியானவையா தவறானவையா என்பது ஒருபுறமிருக்கட்டும். தாம் ஏன் தோற்கடிக்கப்பட்டோம் என்பதைச் சரியாக ஆராய்ந்து அறிய வேண்டும். அதற்கென்ன வழி வகை என்பதை விஞ்ஞானபூர்வமாகக் கண்டறிய வேண்டும். இல்லையெனால் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் போக வேண்டியதுதான்.

# அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்

9ம் பக்கமத் தொடர்ச்சி) உடனடியாக ஈடுபட வேண்டும். நல்லாட்சி அரசாங்க காலத்திலும் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. தெற்கில் எதிரும் புதிருமான கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்க ட்சியும் இணைந்து ஆட்சி அமைக்கப்பட்டிருந்தது. எதிர்க்கட்சித் தலைவராக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நியமிக்கப்பட்டிருந்தார்.

தெற்கின் பெரும்பான்மை கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்த நிலையில் அரசியல் தீர்வை இலகுவாக கண்டிருக்க முடியும். ஆனாலும் அன்றைய அரசாங்கத்துக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடான நிலைமை திடீர் ஆட்சி மாற்றத்துக்கு வழி வகுத்தது. பின்னர் நீதிமன்றத்தின் மூலம் அந்த ஆட்சி அகற்றப்பட்டது. மீண்டும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக ஆட்சியை பொறுப்பேற்ற போதிலும் அரசியல்தீர்வை காண்பதற்கு நிலைமை தவறிப்போனது.

தற்போது நல்லாட்சி அரசாங்கத்தில் இடைநடுவில் கைவிடப்பட்ட இந்த செயற்றிட்டத்தை முன்னெடுத்து அரசியல் தீர்வைக் காணப்போவதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால், அந்த முயற்சியானது உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். சகல கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை ஆரம்பித்து அரசியல் தீர்வு தொடர்பில் தீர்மானம் ஒன்றுக்கு அரசாங்கம் வரவேண்டும். தமிழ் தேசியக்கட்சிகளுடனும் கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேபோன்றே தமிழ் தேசியக்கட்சிகளின் தலைவர்களும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமக்குள் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அரசியல்தீர்வு திட்டம் எவ்வாறானதாக அமைய வேண்டும் என்பது தொடர்பில் உறுதியான முடிவை எடுக்கவேண்டும். அதனடிப்படையில் அரசாங்கத் தரப்புடன் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும். தற்போது அதற்கான பணியில் தமிழ் தேசியக்கட்சிகளின் தலைமைகள் ஈடுபட வேண்டியது அவசியம்

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# தூய்மையான இலங்கை செயலணி வசம் மிகையான அதிகாரங்கள்
# ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லை - அம்பிகா சற்குணநாதன்

தூய்மையான இலங்கை' கருத்திட்டத்துக்கான ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கும் புதிய செயலணிக்கு மிகப்பரந்து பட்ட ஆணையும், அதிகாரங்களும் வழங்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டியிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், இந்நடவடிக்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாறுபட்ட விதத்தில் செயற்படுவார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆலோசனைக்கமைய 'தூய்மையான இலங்கை' கருத்திட்டத்தை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்காக அரசியலமைப்பின் 33 ஆவது உறுப்புரையின் பிரகாரம் 18 உறுப்பினர்களைக் கொண்ட ஜனாதிபதி செயலணியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அம்பிகா சற்குணநாதன், 'தூய்மையான இலங்கை' கருத்திட்டத்துக்கென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால்



நியமிக்கப்பட்டிருக்கும் செயலணி பல்வேறு விதத்திலும் பிரச்சினைக்குரியதாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கும் இச்செயலணி அவருக்கு (ஜனாதிபதிக்கு) மாத்திரமே பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும், எமக்கு மற்றுமொரு செயலணியோ அல்லது ஆணைக்குழுவோ அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இச்செயலணிக்கு மிகப்பரந்துபட்ட அளவிலான ஆணையும், அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக இந்த ஜனாதிபதி செயலணிக்கு சட்டங்களைத் தயாரிப்பதற்கும், அச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான கட்டமைப்பினை நிறுவுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதே போன்று ஏனைய அரச கட்டமைப்புக்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு இச்செயலணிக்கு அதிகாரம் உண்டு' என்றும் அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இந்த செயலணியில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் உள்வாங்கப்படாத போதிலும், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் பலர் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளே முன்னைய ஜனாதிபதியினாலும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், தற்போதைய ஜனாதிபதி அவற்றிலிருந்து மாறுபட்ட விதத்தில் செயற்படுவார் என்ற நம்பிக்கையை இத்தீர்மானம் ஏற்படுத்தவில்லை. அத்தோடு இப்புதிய செயலணியில் சிறுபான்மையினப் பிரதிநிதித்துவமின்றி, இராணுவ அதிகாரிகள் உள்வாங்கப்பட்டிருப்பதானது பெரும்பான்மைவாத அரசு மற்றும் இராணுவ மயமாக்கல் தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்துகிறது: எனவும் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.



# இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் காலமானார்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் காலமானார். அவருக்கு வயது 92. உடல்நலம் பாதிக்கப்பட்டு டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மன்மோகன் சிங் உயிரிழந்ததாக மருத்துவமனை நிர்வாகம் அறிவித்தது.

இது தொடர்பாக எய்ம்ஸ் மருத்துவமனை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் 'இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மரணத்தை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். வயது மூப்பு காரணமாக சிகிச்சையில் இருந்த அவர் டிசம்பர் 26ஆம் தேதி சுயநினைவை இழந்தார்.

டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு இரவு 8.06 மணி அளவில் மன்மோகன் சிங் கொண்டு வரப்பட்டார். எவ்வளவோ முயற்சி செய்த போதிலும், அவர் உயிரை காப்பாற்ற முடியவில்லை. இரவு 9.51 மணியளவில் மன்மோகன் சிங் உயிரிழந்தார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் திடீரென வீட்டில் மயங்கி விழுந்துள்ளார். அவருக்கு வீட்டிலேயே சிகிச்சை அளிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து, அவர் எய்ம்ஸ் மருத்துவமனையில் அவசர சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் பல முயற்சிகள் செய்தும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிரிவினை முதல் பிரதமர் வரை

கடந்த 1932ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் தேதி பிரிக்கப்படாத பிரிட்டிஷ் இந்தியாவில் கா எனும் கிராமத்தில் பிறந்தார் மன்மோகன் சிங். தற்பொழுது அந்த கிராமம் பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் உள்ளது.




தேசப் பிரிவினைக்கு பின் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்த பல லட்சம் இந்து மற்றும் சீக்கிய குடும்பங்களில் இவரது குடும்பமும் ஒன்று. அமிர்தசரஸில் உள்ள இந்து கல்லூரி, பஞ்சாப் பல்கலைக் கழகம், பிரிட்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர் கல்வி கற்ற மன்மோகன் சிங் 1962இல் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்த போது கௌரவம் மிக்க ஆடம் ஸ்மித் பரிசை வென்றவர் சிங்.

கடந்த 1971இல் வர்த்தக அமைச்சகத்தின் ஆலோசகராக அரசுப் பணியில் சேர்ந்தார். ஒரே ஆண்டிலேயே அவருக்கு அடுத்த முக்கியப் பதவி கிடைத்தது. 1972இல் நிதி அமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டார் மன்மோகன் சிங்.

கடந்த 1982 முதல் 1985 வரை இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராகவும் 1985 முதல் 1987 வரை திட்ட கமிஷனின் துணைத் தலைவராகவும் பதவி வகித்தவர். காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று நரசிம்மராவ் தலைமையில் 1991ஆம் ஆண்டு ஆட்சி அமைக்கப்பட்ட போது அந்நியச் செலாவணி பற்றாக் குறை போன்ற கடுமையான பொருளாதார நெருக்கடியில் இந்தியா இருந்தது.

அந்த காலகட்டத்தில் அரசியல் பதவி எதையும் வகிக்காத மன்மோகன்சிங் நரசிம்ம ராவ் தலைமையிலான அமைச்சரவையில் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றார்.



இந்திய பொருளாதார சீர்திருத்தத்தின் மூளையாக கருதப்படும் மன்மோகன் சிங், 1991-1996 ஆட்சிக் காலத்தில் நரசிம்மராவ் உடன் இணைந்து இந்தியாவில் உலகமயம், தாராளமயம், தனியார்மயம் ஆகியவற்றை அமலாக்கினார்.

சிறந்த நிதி அமைச்சருக்கான 'ஆசியா மணி அவார்ட்' (Asia Money Award for Finance Minister of the Year) விருதை 1993, 1994 ஆகிய ஆண்டுகளிலும், 'யூரோ மணி அவார்ட்' (Euro Money Award for Finance Minister of the Year) விருதை 1993ஆம் ஆண்டிலும் பெற்றார் மன்மோகன் சிங்.

கடந்த 1987இல் இந்திய அரசின் பத்ம விபூஷண் உள்ளிட்ட பல தேசிய, சர்வதேச விருதுகளை பெற்றவர் மன்மோகன் சிங்.

காங்கிரஸ் கட்சி 2004 தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, கட்சித் தலைவர் சோனியா காந்தி பிரதமர் பொறுப்பேற்க மறுத்தபோது மன்மோகன் சிங் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, 'மன்மோகன் சிங் இந்தியாவை மகத்தான ஞானத்துடனும் நேர்மையுடனும் வழிநடத்தினார். அவரது பணிவு மற்றும் பொருளாதாரம் பற்றிய ஆழமான புரிதல் தேசத்தை ஊக்கப்படுத்தியது. அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். நான் ஒரு வழிகாட்டியை இழந்து விட்டேன். அவரைப் போற்றிய கோடிக் கணக்கான மக்கள் அவரை மிகவும் பெருமையுடன் நினைவு கூர்வோம்.' என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து காங்கிரஸ் கட்சி தனது பதிவில், 'புகழ் பெற்ற பொருளாதார நிபுணரும், நாட்டின் முன்னாள் பிரதமருமான மன்மோகன் சிங்கின் மறைவு இந்திய அரசியலுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு.' என்று தெரிவித்துள்ளது.

மேலும், 'இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடையவும், அவர்களின் குடும்பத்தாருக்கு இந்த துன்பத்தைத் தாங்கும் ஆற்றலையும் இறைவன் வழங்க வேண்டும். மன்மோகன் சிங் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஆற்றிய பங்குக்கு காங்கிரஸ் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.' என்றும் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பிரதமர் மோடி இரங்கல்

மன்மோகன் சிங்குக்கு பிரதமர் நரேந்திர மோதி எக்ஸ் பக்கத்தில் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார். இந்தியா தனது தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான டாக்டர் மன்மோகன் சிங்கின் இழப்பிற்காக துக்கம் அனுசரிக்கிறது. தாழ்மையான நிலையில் இருந்து வளர்ந்து, மதிப்பிற்குரிய பொருளாதார நிபுணராக உயர்ந்தார். அவர் நிதியமைச்சர் உள்படப் பல்வேறு அரசுப் பதவிகளிலும் பணியாற்றினார்.

பல ஆண்டுகளாக நமது பொருளாதாரக் கொள்கையில் வலுவான முத்திரையைப் பதித்தார். நாடாளுமன்றத்தில் அவரின் தலையீடுகளும் புத்திசாலித்தனமாக இருந்தன. நமது பிரதமராக, மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த விரிவான முயற்சிகளை மேற்கொண்டார்.' என்று தனது இரங்கலில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தனது எக்ஸ் பக்கத்தில், 'முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் மறைவுச் செய்தி மிகவும் வருத்தமளிக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்து நாட்டின் நிதி அமைச்சராகவும், பிரதமராகவும் உயர்ந்தவர். இந்தியாவின் ஆட்சியில் மன்மோகன் சிங் முக்கியப் பங்காற்றினார். அவரது குடும்பத்தினருக்கும்ஆதரவாளர்களுக்கும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று தனது இரங்கலைப் பதிவு செய்துள்ளார்.



மன்மோகன் சிங் மரணத்திற்குத் தனது எக்ஸ் பக்கத்தில் இரங்கல் தெரிவித்துள்ள கௌதம் அதானி, 'டாக்டர் மன்மோகன் சிங்கின் மறைவு வருத்தமளிக்கிறது. இந்தியாவை மறுவடிவமைப்பு செய்து அதன் கதவுகளை உலகுக்குத் திறந்து விட்ட 1991 சீர்திருத்தங்களில் அவரது முக்கியப் பங்கை வரலாறு என்றென்றும் மதிக்கும். மென்மையாகப் பேசிய ஓர் அரிய தலைவர், ஆனால் சாதனை படைத்தவர். அவரது செயல்கள் மூலம் முன்னேறினார், அவரது தலைமை, பணிவு மற்றும் தேசத்திற்கான சேவை ஒரு தலைசிறந்த பாடமாக உள்ளது. அது வரும் தலைமுறைகளுக்கு உத்வேகம் அளிக்கும்.' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கேஜ்ரிவால் தனது எக்ஸ் பதிவில், 'டாக்டர் மன்மோகன் சிங்கின் மறைவு நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. அவருடைய ஞானம் மற்றும் எளிமைப் பண்புகளை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.' என்று குறிப்பிட்டுள்ளார்.

### முதலமைச்சர் ஸ்டாலின் இரங்கல்

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றதாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

'பெரும் தலைவரான அவரது அறிவாற்றலும் தலைமைத்துவமும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை முன்னோக்கி வழிநடத்தியது. பிரதமராக அவரது பதவிக்காலம் நிலையான வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்திய சீர்திருத்தங்கள் ஆகியவற்றைக் கொண்டதாகத் திகழ்ந்தது.' என்று தெரிவித்துள்ளார்.

அதோடு, முன்னாள் முதல்வர் கருணாநிதி டாக்டர் மன்மோகன் சிங்குடன் இணைந்து செயல்பட்டது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றியது. அவர்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த மதிப்பும், அவர்களது கூட்டணியும் மிகப் பெரும் சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வந்து, அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை வலுப்படுத்தின.' என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழ்நாட்டின் கனவுகளை மதிப்பவராக டாக்டர் மன்மோகன் சிங் இருந்ததாகவும் தென்னக மக்களின் குரல்கள் தேசிய அளவிலான திட்டங்களில், கொள்கைகளில் எதிரொலிப்பதை அவர் உறுதி செய்ததாகவும் முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அமைதியான, ஆழ்ந்த சிந்தனை கொண்ட தலைமைப் பண்பானது பொதுவாழ்வில் காண்பதற்கு மிகவும் அரிதான பண்பாகும். அவர் குறைவாகப் பேசினார், ஆனால் மிருதியாகச் சாதித்தார்.

அவர் வாய்ச்சொல் வீரராக அல்லாமல் தனது தீர்க்கமான செயல்களினால் பேசினார். பிரதமர் என்பதையும் தாண்டி தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு நண்பராக அவர் விளங்கினார்.' என்றும் தனது இரங்கலில் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

நன்றி:- பிபிசி



Amma Pawn Broker
அம்மா நகை அடைவு மாடம்
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்ற முழுக்காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை
CASH FOR GOLD
நத்தார் புதுவருட
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
5 நிமிடங்களில் உங்கள் கைகளில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்
உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்
எவ்வளவு தொகையானாலும் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
நத்தார் புத்தாண்டு பொங்கலை முன்னிட்டு மிகக் குறைந்த வட்டி வீதத்தில்
ரொரன்ரோவில் வர்த்தகத்துறையில் 30வது வருட கால முன்னோடிகள்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
We buy your old gold jewellery for the highest rate
அம்மா போல அம்மா பவுன் புறோக்கர்ஸ் நம்பிக்கை | நாணயம் | உத்தரவாதம்
105A - 2425 Eglinton Ave, E, Scarborough
(Kennedy & Eglinton) ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861




HAPPY
Holidays!
RE/MAX
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770
50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
*Independently Owned And Operated
Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.
Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
nanohomes@gmail.com

# என்று முடியும் எங்கள் பதவிப் போட்டிகள்?

## நானே தலைவன் வாக்கெடுப்பை நடத்த முடியாது - மாவை

## பொதுச்சபை அனுமதியின்றி மாவையை நீக்க முடியாது -ஸ்ரீநேசன்

## மாவையை நீக்க யாரிடமும் அனுமதி பெற வேண்டியதில்லை-சுமா



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நான் விலகவில்லை. அதன் பிரகாரம் கட்சியின் தலைமைப் பதவியில் நானே தலைவராகத் தொடர்கின்றேன். ஆகவே தலைமைப் பதவி தொடர்பில் வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டிய அவசியமில்லை என்று மாவை.சோ.சேனாதிராஜா அறிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நாளை சனிக்கிழமை (28) வவுனியாவில் நடைபெறவுள்ளதோடு அந்தக் கூட்டத்தில் தலைமைப் பதவியில் மாவை. சோ.சேனாதிராஜா நீடிக்க முடியுமா, இல்லையா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கத்துக்கு அவர் அனுப்பி வைத்துள்ள எழுத்து மூலமான கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

சில ஆண்டுகளுக்கு முன்னதாக கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்காகக் கட்சியின் தலைவர் என்ற வகையில் பதில் பொதுச்செயலாளராகச் செயற்படுவதற்கு உங்களை (ப.சத்தியலிங்கம்) நானே முன்மொழிந்திருந்தேன்.

அதற்கு அமைவாக, தாங்கள் பதில் பொதுச்செயலாளராக எனது அறிவுறுத்தல்களுக்கு அமைவாகச் செயற்பட்டு வருவதோடு தேர்தல் பதிவேடுகளிலும் அவ்வாறே காணப்படுகின்றது. அத்துடன் கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் யாருடைய தலைமையில் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடவில்லை. அதனடிப்படையில் அக்கூட்டம் செல்லுபடியற்றதாகும்.

அதேநேரம், எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கான அறிவிப்பினை விடுவதற்கு முன்னதாக குறித்த கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலை எனக்கு அனுப்பி வைக்குமாறும் எனது அனுமதியின் பின்னரே உறுப்பினர்களுக்கான அறிவிப்பைச் செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், ஒக்டோபர் 7ஆம் திகதி என்னால் சிறிதரன் மற்றும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதமானது பதவி விலகும் அறிவிப்பை உள்ளடக்கியது அல்ல. நான் கட்சியின் தலைமைப் பொறுப்பினை சிவஞானம் சிறிதரனை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறே கேட்டுக்கொண்டிருக்கின்றேன்.

குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்ட இரண்டு மாதங்களாகின்ற போதும் சிறிதரன் தலைமைப் பதவியை பொறுப்பேற்காமையின் காரணமாக நானே தலைமைப்பதவியில் நீடிக்கின்றேன். அவ்வாறான நிலையில் கட்சியின் தலைமைப்பதவி சம்பந்தமாக வாக்கெடுப்பு ஒன்றை முன்னெடுப்பது தேவையற்ற விடயமாகும். தற்போதும் நானே தலைமைப் பதவியில் நீடித்துக் கொண்டிருக்கின்றேன். மேலும், கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற முறையற்ற கூட்டத்தில் பங்கேற்றிருந்த நான் உறுப்பினர்களால் வெளியிடப்பட்ட சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் உரிய பதில்களை அளித்துள்ளேன். அந்த வகையில், 28ஆம் திகதி



நடைபெறவுள்ள மத்திய செயற்குழு கூட்டத்தில் வாக்கெடுப்பை நடத்த முடியாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### பொதுச்சபையின் அனுமதியின்றி மாவையை நீக்க முடியாது

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவரை மட்டுமல்ல கட்சியின் எந்தவொரு மத்தியகுழு உறுப்பினரையும் பொதுச்சபையின் அனுமதியின்றி நீக்கமுடியாது என்று அக்கட்சியின் பாராளுமன்றக் குழுக்களின் ஊடகப்பேச்சாளரும், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார். ஞானமுத்து சிறிநேசன் எம்.பி தெரிவிக்கையில்,

மாவை.சோ.சேனாதிராஜா மட்டுமல்ல கட்சியின் எந்தவொரு மத்திய குழு உறுப்பினரையும் பதவி நீக்குவதற்கு பொதுச்சபையின் அனுமதி அவசியமாகும். ஆகவே பொதுச்சபையின் அனுமதியின்றி மாவை.சோ.சேனாதிராஜாவை கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து நீக்கிவிட முடியாது.

முன்பு கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த கி.துரைரெட்ணசிங்கம் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமையை தன்னிச்சையாக வழங்கினார் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்து அவரை பதவி விலக்க வேண்டும் என்று கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் குறிப்பிட்ட போது, அவரைப் பதவி நீக்கம் செய்வதாக இருந்தால் கட்சியின் பொதுச்சபையின் அனுமதி தேவையென்றும் அவ்வாறு அனுமதியின்றி பதவி நீக்கினால் நீதிமன்றத்தினை நாட வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

ஆகவே துரைரெட்ணசிங்கம் விடயத்தின் பொதுச்சபையின் அனுமதி தேவையாக இருக்கின்ற போது மாவை.சோ.சேனாதிராஜாவின் விடயத்தில் அவ்விதமான அனுமதி தேவையில்லை என்று கூறுவது எவ்வாறு நியாயமாகும். ஆகவே மாவை. சேனாதிராஜாவை பதவி நீக்கம் செய்ய முடியாது. அவர் தலைமைப் பதவியில் நீடிப்பார் என்றார்.

### மாவையை நீக்க யாரிடமும் அனுமதி பெற வேண்டியதில்லை

மாவை .சேனாதிராஜா கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து பதவி விலகுவதாக உத்தியோக பூர்வமாக அறிவிப்பைச் செய்தபின்னர் எந்தவொரு அனுமதியையும் யாரிடமும் பெற வேண்டுமென்று யாப்பில் கூறப்படவில்லை என்று தமிழரசுக்கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான செயலாளரும், ஜனாதிபதி சட்டத்தரணி



யுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மாவை.சோ.சேனாதிராஜா கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து விலகுவதாக கட்சியின் பொதுச்செயலாளருக்கு ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதியே எழுத்து மூலமாக அறிவித்து விட்டார். அக்காலம் தேர்தலுக்குரியதாக இருந்தமையால் கட்சியால் எவ்விதமான தீர்மானங்களையும் எடுக்க முடியவில்லை.

தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் கட்சியின் பொதுச்செயலாளர் எழுத்து மூலமாக மாவை.சேனாதிராஜா விடத்தில் அவர் ஏற்கனவே அறிவித்த பதவி விலகல் நிலைப்பாட்டிலா உள்ளார் என்ற கேள்வியை எழுப்பி எழுத்துமூலமாக கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

ஆனால் அதற்குரிய பதிலை கட்சியின் தலைவர் அனுப்பி வைக்கவில்லை. ஆகவே அவர் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நீங்கும் தீர்மானத்தில் உறுதியாக இருக்கின்றார் என்று தான் கருதும் நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறான நிலையில் கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து நீங்குவதாக தானாகவே அவர் அறிவித்த பின்னர் அப்பதவி வெற்றிடமாகிறது. இந்த விடயத்தில் மத்தியசெயற்குழு யாரையும் பதவி நீக்கம் செய்யவில்லை. உறுப்புரிமையை இழக்கவும் செய்யவில்லை. அறிவித்த முடிவொன்றையே அமுலாக்குவதற்கு முனைகின்றது. எனவே இந்த விடயத்தில் பொதுச்சபையின் அனுமதி அவசியமற்றது.

உண்மையில் மத்திய குழுவின் தெளிவான நிலைப்பாட்டிற்காகவே வாக்கெடுப்புக் கூட அவசியமாகின்றது. கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து நீங்குவதாக அறிவித்து ஒன்றரை மாதம் நிறைவடைந்திருக்கின்றது என்பதும் இங்கே முக்கியமான விடயமாகின்றது என்றார்.

